بسم الله الرحمن الرحيم

# تصوف کا مقصد (ٹمل)

# தஸவ்வுஃப் ஏன்? ஏதற்கு?

உருது மூலம்:-

**மௌலானா பீர் துல்:.பிகார் அஹ்மத் நக்ஷ்பந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

حضرت مولانا پیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمۃ اللہ علیہ

தமிழில்:-

**மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ**

**தாருல் இஸ்லாஹ்**

(சமூக சீர்திருத்தப் பாசறை)

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | தஸவ்வுஃப் ஏன்? எதற்கு? |
| ஆசிரியர் பெயர் | : | மௌலானா மௌலவி ரியாஜுத்தீன் ஹஸனீ |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கம் | : | 73 |
| விலை | : | ரூ.35.00 |
| இரண்டாம் பதிப்பு | : | ஜூன் - 2026<br>துல் ஹிஜ்ஜா - 1447 |
| தட்டச்சு | : | மௌலானா, அப்துல் காதிர் ஹஸனீ, PH. 6385575974 |
| வெளியீட்டு எண் | : | 4 |

**நூல் கிடைக்குமிடம்:**

சமூக சீர்திருத்தப் பாசறை

(தாருல் இஸ்லாஹ்) பள்ளபட்டி.

செல்: 89256 11688

# பொருளடக்கம்


1. மதிப்புரை!......................................................5
2. வாழ்த்துரை!......................................................9
3. தஸவ்வுஃபி ஏன்? எதற்கு?......................................11
4. சூழல் கைதியாக மனிதன்......................................12
5. பிராணிகளின் சுபாவமும் பிரதிபலிக்கும்......................13
6. நல்ல தோழமை நழுவ விடாது......................................14
7. உள்ளம் நோயில்லமாகும்!......................................14
8. உடல்-உள நோய்களுக்கு மத்தியிலான ஒற்றுமை..................15
9. புத்தகம் பார்த்து வைத்தியம் செய்தல் புத்தியுள்ளவருக்கு அழகல்ல......................................16
10. நான்கு விதமான மருத்துவமுறைகள்..............................19
11. சிகிச்சையில் தாமதித்தால் சிக்கல் அதிகமாகும்!..................20
12. அறிகுறிகளால் பிணி அறிவோம்......................................21
13. சில்சிலா என்றால் என்ன?......................................22
14. ஆசானில்லாத கல்வி-அஸ்திவாரமில்லாத கட்டிடமாகும்........23
15. மனநோய்களுக்கான மாத்திரைகள்......................................24
16. ஆன்ம நோய்க்கான ஆதாரங்கள்......................................29
17. ஈமானை இழக்கச்செய்யும் இச்சைப்பார்வை......................31
18. ஒரு நேரமாவது ஓர்மையாக தொழுதுள்ளோமா?..................32
19. ஷரீஅத் சட்டங்களின் வகைகள்......................................36
20. ஃபிக்ஹே ளாஹிர், ஃபிக்ஹே பாதின்......................................37

21. பரிசுத்தமான உள்ளம் கொண்டவரே பாக்கியவான்!...............38

22. ஷரீஅத், தரீகத் கல்வி.......................................................39

23. அடிப்படைக் கடமையே அரைகுறையாக................................41

24. தொழுகையில் உலக சிந்தனை............................................42

25. எழுத்துக்களும், எண்ணங்களும்.......................................44

26. ஈமானில் கூடுதல் எவ்வாறு?..........................................45

27. நிறவியாபாரியும், நிறமேற்றுபவர்களும் வெவ்வேறானவர்கள்..47

28. எங்கும் நான்கு, எதிலும் நான்கு,.....................................50

29. அக,புற அறிவு ஞானம் பெறுவோம்...................................52

30. புரிந்தவர் பாதுகாப்பார், புரியாதவர் பறிகொடுப்பார்................53

31. இறக்கும் தருவாயில் தான் ஈமானுக்கு அதிக ஆபத்துள்ளது......55

32. முகஸ்துதியற்ற வணக்கத்தை விட ஒரு நிமிட தோழமை மேலானது!..............................................................57

33. எண்ணங்களைக் கற்பிக்கும் துறை எவ்வாறு பித்அத்தாகும்....60

34. அறிந்தவர்க்குக் கூடும், அறியாதவர்க்கு கூடாது.............61

35. லிஃப்டில் ஓதும் துஆ.......................................................63

36. மஷாயிகுகளும் மார்க்கல்வியில் தேர்ச்சிப்பெற்றவர்களே!..64

37. புரியாதவர் புறந்தல்லவே செய்வார்...................................65

38. விமர்சனங்களும், விளக்கங்களும்...................................68

39. தஸவ்வுஃபி ஏன்? எதற்கு?...............................................69

40. மூங்கிலும் கரும்பும் எவ்வாறு ஒன்றாகும்?.......................71

# மதிப்புரை!

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

எல்லாப் புகழும், புகழ்ச்சியும் அகிலங்கள் அனைத்தையும் படைத்துப் பரிபாலித்து வரும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகுக! அவனது சாந்தியும், சமாதானமும் நமது வழிகாட்டி முஹம்மத் ﷺ அவர்கள் மீதும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள் மற்றும் நேர்வழியைப் பின்பற்றிய நல்லோர்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

**“நிச்சயமாக எவர் தம் உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொண்டாரோ அவர் வெற்றியடைந்து விட்டார்.”**

**அல்குர்ஆன் (91:9)**

இஸ்லாம் என்பது வெறும் சடங்குகளின் தொகுப்பல்ல; அது உடலையும் உள்ளத்தையும் ஒருசேரப் தூய்மைப்படுத்தும் ஓர் உன்னத வாழ்வியல் நெறியாகும். ஒரு முஸ்லிமான அடியான் கலிமாவைக் கூறி, தொழுகை, நோன்பு போன்ற கடமைகளை நிறைவேற்றும்போது அவனது புறம் (வெளிப்படை) சீரடைகிறது. ஆனால், அதே நபரின் அகம் (உள்ளம்) சீரடையாவிட்டால், அந்த வணக்க வழிபாடுகள் வெறும் உடற்பயிற்சிகளாக சுருங்கிவிடக் கூடும் .

இங்குதான் “தஸவ்வுஃப்” (ஆன்மீகம்) என்னும் அத்தியாவசியக் கலை முக்கியத்துவம் பெறுகிறது.

நபி ﷺ அவர்கள் விவரித்த “இஹ்ஸான்” (அல்லாஹ்வை நேரில் காண்பது போன்ற உணர்வுடன் வணங்குவது)

என்ற உயரிய நிலையை அடைவதே தஸவ்வுஃப் ஆகும். பேராசை, பொறாமை, அகந்தை, முகஸ்துதி போன்ற மனநோய்களிலிருந்து உள்ளத்தைப் தூய்மைப்படுத்தி, இறைக்காதல், பொறுமை, நன்றியுணர்வு, பணிவு போன்ற நற்குணங்களால் அதை அலங்கரிப்பதே இதன் நோக்கம்.

இன்றைய நவீன உலகில், தஸவ்வுஃப் என்ற சொல்லாடல் பலவிதமான தவறான புரிதல்களுக்கும், தேவையற்ற விவாதங்களுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகிறது. ஒருபுறம் நாத்திக சிந்தனைகளும், மறுபுறம் மார்க்க வரம்புகளை மீறிய போலி ஆன்மீகமும் சமுதாயத்தைக் குழப்பிக் கொண்டிருக்கும் வேளையில், தஸவ்வுஃப் குறித்த தெளிவான, குர்ஆன் மற்றும் சுன்னாவின் அடிப்படையிலான வழிகாட்டுதல் காலத்தின் கட்டாயமாகும்.

இந்த "தஸவ்வுஃப் ஏன்? எதற்கு?" என்னும் நூல், பின்வரும் முக்கியக் கேள்விகளுக்கு எளிய நடையில் விடையளிக்கிறது.

தஸவ்வுஃப் என்பது இஸ்லாத்திற்குப் புறம்பானதா, அல்லது இஸ்லாத்தின் இதயமா? நபித்தோழர்களின் வாழ்வில் ஆன்மீகம் எவ்வாறு வெளிப்பட்டது?

ஒரு சாமானிய மனிதன் தன் அன்றாட வாழ்வில் தூய்மையான ஆன்மீகத்தை எவ்வாறு பொறுத்தலாம்? இது போன்ற அனைத்து சந்தேகங்களுக்கும் விடை அளிக்கிறது.

இறைத்தேடலில் இருக்கும் ஒவ்வொரு முஃமினுக்கும், தன் உள்ளத்தைப் பண்படுத்தத் துடிக்கும் ஒவ்வொரு வாசகருக்கும் இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்று நம்புகிறேன்.

வல்ல அல்லாஹ் நமது இந்தச் சிறிய முயற்சியை ஏகபோகமாக ஏற்றுக்கொண்டு, நம் அனைவரின் உள்ளங்களையும் அவனது நேசத்தால் நிரப்புவானாக! ஆமீன்.

இப்படிக்கு:

மௌலானா மௌலவி

**முஃப்தி ஷகீல் அஹ்மத் நக்ஷபந்தி**

துணை முதல்வர்

மத்ரஸா பாக்கியாத்துஸ் ஸாலிஹாத்,

வேலூர். செல்;9444453232

# دعائیہ کلمات بابرکات

## محبوب العلماء والصلحاء حضرت اقدس مولانا حافظ پیر ذوالفقار احمد صاحب نقشبندی مجددی مدظلہ العالی دامت برکاتہم

اللہ رب العزت کی سنت ہے کہ انبیاء کرام علیہم الصلوۃ والسلام کو اپنی قوم کی زبان میں مبعوث فرماتے ہیں۔ چنانچہ ارشاد باری تعالی ہے۔ "وَمَآ أَرۡسَلۡنَا مِن رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوۡمِهِۦ" (اور ہم نے ہر رسول کو ان کی قوم کی زبان ہی میں مبعوث کیا ہے)

اس زمانے میں علاقائی زبان میں اصلاح وارشاد تصوف وسلوک نیز دین کے تمام ہی شعبوں کا لسانی وقلمی کام جلد اثر انداز اور قبولیت عامہ کا ذریعہ ہے۔

تمل زبان بہت قدیم زبان ہے، اس زبان کے بولنے والے دنیا کے مختلف ممالک میں کثیر تعداد میں آباد ہیں، تصوف کے علوم تقریبا یا تو عربی میں ہیں یا فارسی اور اردو زبان میں۔ موجودہ دور میں سلسلۂ عالیہ نقشبندیہ سے اللہ رب العزت نے سارے عالم میں خوب فیض جاری فرمایا ہے۔

نہ صرف تمل علاقے کے لیے بلکہ اس زبان کے بولنے والے سب ہی بندگان خدا کے حق میں خواہ وہ دنیا کے جس خطے میں ہوں یہ بڑی نعمت ہے کہ عزیز گرامی قدر مولانا مفتی شکیل احمد صاحب نقشبندی مجددی سلمہ زید مجدہ اپنی مجالس میں اس فقیر کے طویل خطبات سے اہم اہم مضامین ونکات کا انتخاب کرتے ہیں اور انہیں بزبان تمل ترجمہ کر کے مختصر ومفید اور جامع انداز میں رسائل کی شکل میں طبع کروا کر ہزاروں کی تعداد میں عام کرتے ہیں، رمضان المبارک میں دوران اعتکاف ان مرتب شدہ رسائل کی مستقل تعلیم ہوتی ہے، الحمدللہ ہزاروں کا مجمع ان رسائل سے استفادہ کر رہا ہے۔

اللہ رب العزت سے دعا ہے کہ عزیز موصوف کی اس محنت کو شرف قبولیت بخشے اور دارین میں نفع ونجات کا ذریعہ بنائے۔ آمین

فقیر ذوالفقار احمد نقشبندی مجددی رحمتہ اللہ علیہ

کان اللہ لہ عوضًا عن کل شیءٍ

## வாழ்த்துரை!

மஹ்பூபுல் உலமா வஸ்ஸுலஹா ஹஜ்ரத் அக்தஸ் மௌலானா ஹாபிழ் ஃபீர் ஜுல்ஃபிகார் அஹ்மத் ஸாப் நக்ஷ்பந்தி, முஜத்திதீ ﵀ அவர்களின் பரக்கத் பொருந்திய துஆவின் வார்த்தைகள்.

நபிமார்களை அவர்களின் சமூக மக்கள் என்ன மொழி பேசுகிறார்களோ அதே மொழியைப் பேசுபவர்களாக அனுப்புவது அல்லாஹ்வுடைய சுன்னத்தாகும். இதையே எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்:

وَمَا أَرْسَلْنَا مِنْ رَّسُولٍ إِلَّا بِلِسَانِ قَوْمِهِ

**“மேலும் நாம் ஒவ்வொரு தூதரையும் அவர்களுடைய சமூகத்தாரின் மொழியைப் பேசக்கூடியவர்களாக அனுப்பியுள்ளோம்.”**

தற்காலத்தில் சீர்திருத்தம் மற்றும் வழிகாட்டுதல், சூஃபித்துவம் மற்றும் சுலூக் உடைய உபதேசங்கள், அதே போல் மார்க்கத்தின் அனைத்து துறைகளிலும் பேச்சு மற்றும் எழுத்தின் மூலமாக நடைபெறும் சேவைகள் அனைத்தும் அவரவர்களுடைய பிராந்திய மொழியில் இருந்தாலே விரைவான தாக்கத்தையும், பொது அங்கீகாரத்தையும் பெறக் கூடியதாக இருக்கும்.

அவ்வகையில் தமிழ் மொழி என்பது மிகத் தொன்மையான மொழியாகும். அதைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளவர்கள் உலகம் முழுவதும் அதிக எண்ணிக்கையில் பரவியுள்ளனர்.

சூஃபித்துவ ஞானங்கள் அனைத்தும் கிட்டதட்ட அரபு, பாரசீகம் மற்றும் உருது மொழிகளில் மட்டுமே உள்ளன.

தற்போதைய சுழலில், அல்லாஹ் நக்ஷ்பந்தி தரீக்காவின் மூலம் முழு உலகிலும் சீர்திருத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறான். தமிழ்நாட்டிலுள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல் இந்த மொழியைப் பேசக்கூடிய அல்லாஹ்வின் அடியார்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி அவர்களுக்கும் இந்த செயல் மிகப் பயனுள்ளதாகும்.

நமது அன்பான மௌலானா முஃப்தி ஷகீல் அகமது சாஹிப் நக்ஷ்பந்தி முஜத்திதீ அவர்கள் இந்த ஃபக்கீருடைய பல உபதேசங்களிலிருந்து முக்கியமான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றை தமிழில் மொழிபெயர்த்து, குறுகிய, பயனுள்ள துண்டுப்பிரசுரங்களாகவும் மற்றும் சிறு தொகுப்புகளாகவும் அச்சிட்டு ஆயிரக்கணக்கானோருக்கு விநியோகிப்பது ஒரு பெரிய பாக்கியமான காரியமாகும்.

மேலும் புனித ரமலான் மாதத்தில், இந்தத் தொகுப்புகள் தொடர்ந்து படிக்கப்பட்டு வருலதும் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அல்ஹம்துலில்லாஹ், ஆயிரக்கணக்கான மக்கள் இதனால் பயனடைகிறார்கள்.

ஹஜ்ரத் அவர்களின் இந்த முயற்சி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நான் அல்லாஹ்விடம் விஷேசமாக துஆ செய்கிறேன். அல்லாஹ் அவர்களை மன்னித்து, அவர்களுக்கு நன்மை மற்றும் மன்னிப்பற்குக் காரணமாக இதை ஆக்குவானாக.! ஆமீன்.

**பீர் துல்ஃபிகார் அஹ்மத் நக்ஷபந்தீ, முஜத்தீதி [ரஹ்]**

# தஸவ்வுஃப் ஏன்? எதற்கு?

وَ الَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدَيْنَهُمْ سُبُلَنَا وَ أَنَّ اللهَ لَمَعَ الْمُحْسِنِيْنَ

**நம்மை அடைய பாடுபடக்கூடியவர்களுக்கு நாம் திட்டவட்டமாக பல வழிகளை காண்பிப்போம். (அன்கபூத்:69)**

மனிதர்களை படைத்த அல்லாஹ் அவர்களில் ஒவ்வொருவருக்குள்ளும் பல்வேறுபட்ட தகுதி, ஆற்றல்களை வைத்துள்ளான்.

اَلنَّاسُ مَعَادِن كَمَعَادِنِ الذَّهَبِ وَ الْفِضَّةِ

"மக்கள் தங்கம், வெள்ளி சுரங்கங்களை போன்றவர்கள்" என்று நபி ﷺ அவர்கள் ஒப்புமை செய்திருப்பதும் இக்கருத்தை விளக்குவதற்கேயாகும். மனிதர்கள் எல்லோரிடத்திலும் ஏதேனும் ஒரு நற்பண்பு அவசியம் இருப்பினும், சிலரிடம் சில பண்பு குறிப்பாகவும், வேறு சிலரிடம் வேறு பண்பு குறிப்பானதாகவும் இருக்கும். ஒருவரின் வாழ்வை சற்று அருகிலிருந்து நோட்டமிட்டால் அவரிடம் வித்தியாசமான பல தன்மைகள் இருப்பதை அறிய முடியும்.

பூக்கள் அனைத்தும் "பூ" என்ற பொது பெயரில் ஒன்றுபட்டு இருப்பினும் ஒவ்வொரு பூவின் நிறமும், மணமும் மற்றொன்றை விட வேறுபட்டு இருப்பதென்பது இறை நியதி என்பதுபோல் மனிதர்கள் அனைவரும் மனிதன் என்ற பொதுப் பெயரில் ஒன்றுபட்டிருந்தாலும்

அவர்கள் தங்களிடமுள்ள பல நல்ல பண்புகளில் ஒருவர் மற்றவரைவிட்டு வேறுபட்டவர்களாக இருப்பதும் இறை நியதியாகும்.

பலநேரம் ஒவ்வொருவரிடம் உள்ள பண்பை வைத்தே ஒருவரை மற்றவரிலிருந்து இலகுவாக பிரித்தறிய முடியும். நாம் மிகக் கெட்டவர் என்று ஒதுக்கக்கூடிய ஒரு நபரிடத்திலும் ஏதேனும் ஒரு நலவு இருக்கத்தான் செய்யும் என்பதை மறக்கக்கூடாது.

## சூழல் கைதியாக மனிதன்:-

நலவு மட்டுமே அடங்கிய படைப்பாக மலக்குகளும், தீயது மட்டுமே அடங்கிய படைப்பாக ஷைத்தான்களும், நலவு தீங்கு ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்த படைப்பாக மனிதர்களும் படைக்கப்பட்டுள்ளார்கள் என்பது அல்லாஹ்வுடைய படைப்பின் விதியாகும். இவ்வகையில் ஒவ்வொரு மனிதனிடத்திலும் நல்லதும், தீயதும் சேர்ந்தே இருக்கும்.

யார் தமது சூற்றுச்சூழலை நல்லதாக, நலவைத் தூண்டக்கூடியதாக அமைத்துக்கொள்வாரோ அவர் சுயமே நன்மை செய்பவராக இருப்பார். யார் தமது சுற்றுச்சூழலை தீயதாக, தீயவற்றைத் தூண்டக்கூடியதாக அமைத்துக் கொள்வாரோ அவர் சுயமே தீமை செய்பவராக இருப்பார்.

அவ்வாறே எல்லோரை விட மிகத் தீய நபருக்கும் நல்ல சூழல் அமைந்தால் அவர் திறுந்துவதற்குண்டான வாய்ப்பு ஏற்படுமென்பதும் உறுதியானதாகும். சுருங்கக்கூறின் சூழலின் தாக்கம் அதில் வாழும் ஒவ்வொரு நபரின் வாழ்விலும் பிரதிபலிக்குமென்பது மாற்றமுடியாத விதியாகும்.

## பிராணிகளின் சுபாவமும் பிரதிபலிக்கும்:-

பிராணிகளை வளர்ப்பவரிடத்தில் அப்பிராணியின் விஷேச குணம் கட்டாயம் பிரதிபலிக்கும் என்பதாக அறிஞர்கள் எழுதியுள்ளார்கள். உதாரணமாக, குதிரை வளர்ப்பவரிடத்தில் வீரமும், ஒட்டகம் வளர்ப்பவரிடத்தில் பிடிவாதமும், ஆடு வளர்ப்பவரிடத்தில் எளிமையும், பணிவும் அவசியம் வெளிப்படும்.

இதில் சிந்திக்கக்கூடிய விஷயம் என்னவென்றால், கால்நடைகளுடன் கலந்து இருப்பதால் அதன் பண்பு மனிதனிடம் பிரதிபலிக்குமென்றால் நல்லடியார்களுடன் சேர்ந்திருந்தால் அவர்களின் நற்பண்புகள் நமக்குள் பிரதிபலிக்காதா என்ன? ஆக சேர்ந்திருத்தல் கட்டாயம் பிரதிபலிப்பை ஏற்படுத்தியே தீரும் என்ற விதி சத்தியமானதாகும்.

எனவே ஒவ்வொரும் முடிந்தவரை நல்ல சூழலில் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக்கொள்ள முயல வேண்டும். அதற்கு முதலாவதாக நல்ல தோழமையை தேர்ந்தெடுக்க வேண்டும்.

## நல்ல தோழமை நழுவ விடாது:-

உண்மையாகவே, நல்ல நட்பானது எப்போதும் தன் நண்பனை சறுகவிடாது. ஒருகால் தன் நண்பன் பாதை மாறி சென்றாலும் அவனை நேர்வழிக்கு இழுத்துக் கொண்டுவந்துவிடும். இக்கால வாலிபர்கள் பெரும்பாலும் தன் தீய நண்பன் சம்பந்தமாக, அவன்தான் தவறு செய்கிறான், நான் அவனுடன் இருந்தாலும் அவன் செய்யும் தவறில் ஈடுபடுவதில்லை, நான் நல்லவனே என்று வாதிடுகின்றனர்.

இவ்வாறு எந்த வாலிபனாவது தன்னிலை விளக்கம் கொடுத்தால் அவன் பொய் சொல்கிறான் என்று உறுதிக்கொள்ளுங்கள்.

اَلرَّجُلُ عَلَي دِيْنُ خَلِيْلِهِ

ஒருவன் தன் நண்பன் மூலமே அடையாளம் காணப்படுகிறான் என்றிருக்க இவன் கூற்று எவ்வாறு சாத்தியமாகும்? அவனுடைய நண்பன் நல்லவன் என்றால் இவனும் நல்லவனே, அவன் தீயவன் என்றால் இவனும் தீயவனே என்பதை அறிந்துக்கொள்ளுங்கள்.

ஆக மனிதன் எச்சூழலில் வாழ்கிறானோ அதன் தாக்கம் அவனுள் ஏற்படவே செய்யும், நல்ல, தூய வாழ்வு வாழ்பவன் மேலும் தன்னை நல்ல சூழலில் ஆக்கிக்கொள்பவன் அல்லாஹ்விற்கு பிரியமான நெருக்கமான அடியானாகுவான். தீமை செய்பவன் மேலும் தன்னை தீய சூழலில் ஆக்கிக்கொள்பவன் இறைக்கோபத்திற்கு உள்ளாகுவான் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## உள்ளம் நோயில்லமாகும்!

மனித உடலுக்கு அவ்வப்போது நோய்கள் ஏற்படுவதுபோல் அவனது உள்ளத்திற்கும் பலவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. உடலுக்கு ஏற்படும் நோய்களை நாம் விளக்கமாக அறிவோம். இன்றைய நவீன மருத்துவ அறிவியலோ அனுதினமும் வெவ்வேறு புதிய நோய்களை கண்டறிந்து அதற்கு புதிய புதிய பலபெயர்களை சூட்டிக்கொண்டிருக்கிறது.

இரத்த அழுத்தம், சர்க்கரை, கொழுப்பு போன்ற நோய்களும், இன்னும் மூட்டு வலிகளுக்கென வித்தியாசமான

புதிய பல பெயர்களும் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறே உள்ளத்தை பாதிப்புக்குள்ளாக்கும் பல நோய்கள் உள்ளன. அவற்றிற்கும் ஆன்மிக மருத்துவர்கள் பலபெயர்களை வைத்துள்ளார்கள். உதாரணமாக கோபம், குரோதம், முகஸ்துதி, பெருமை, பொறாமை, தொழுகையில் சோம்பல், நோன்பு, ஜகாத்தில் அலட்சியம் ஆகியவை அனைத்தும் உளவியல் நோய்களாகும்.

## உடல்-உள நோய்களுக்கு மத்தியிலான ஒற்றுமை:-

உடல் ரீதியான நோய் ஏற்படும்போது எவ்வாறு ஒரு மருத்துவரிடம் செல்கிறோமோ அவ்வாறே உள்ளம் ரீதியான நோய்களுக்கென்றும் சிறந்த மருத்துவர்கள் உள்ளனர். உடல் நோய் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை எம். டி, எம்.எஸ், சர்ஜன் என்ற பல பெயர்களால் அழைப்பதுபோல் உளநோய் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை உலமாக்கள், மஷாயிக், சுலஹா என்ற பல பெயர்களால் அழைக்கின்றோம்.

ஷர்ஹேஅஸ்பாப், காணுன்ஷா, மின்ஹாஜூல்அதிப்பா போன்ற பல புத்தகங்களை திறமையான மருத்துவர்கள் எழுதியிருப்பதுபோல், உளவியல் நோய்களுக்கென்றும் பல புத்தகங்கள் உள்ளன. அவற்றில் மிக முக்கியமான புத்தகம் அல்லாஹ்வின் வார்த்தையான திருக்குர்ஆனாகும். அதற்கு அடுத்து புகாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸாயீ, ரியாழுஸ்ஸாலஹீன் போன்ற புத்தகங்கள் உள்ளன.

இவற்றில் உளநோய்களுக்கான சிகிச்சை முறைகள் இடம்பெற்றுள்ளன. உடல்நோய்களுக்கு ஒருவன் வெறுமனே புத்தகத்தை வைத்து மட்டும் சிகிச்சை செய்ய விரும்பமாட்டான். எனக்கு இரத்தக்கொதிப்புள்ளது. என்னிடம் மருத்துவக்குறிப்புகள் அடங்கிய புத்தகம்

ஒன்றுள்ளது. அதில் என்ன மருந்து கூறப்பட்டுள்ளதோ அதை உட்கொள்ளப்போகிறேன் என்று யாராவது கூறினால் அவர் உயிருக்கு ஊறு விளைவிக்கப்போகிறார் என்று அர்த்தமாகும்.

அவ்வாறே உடல் நோய் சிகிச்சைக்கு ஏதேனுமொரு மருத்துவரிடம் காண்பிப்போம் என்று அலட்சியப்படுத்தாமல் ஒரு நிபுணர் தாண்டி அடுத்த நிபுணரிடம் செல்ல விரும்புகிறோம். ஒரு மருத்துவர் உனக்கு இந்த நோய் உள்ளது என்று கூறினால் அதை நம்பாமல் வேறொரு மருத்துவரிடம் சென்று அதை உறுதி செய்து கொள்கிறோம்.

இவ்வாறே உளநோய்க்கும் வெறும் புத்தகத்தை மட்டும் வைத்து சிகிச்சை பெற எண்ணாமல், அதற்கென்றுள்ள, சிறந்த நிபுணரை தேடுவது தானே முறையாகும். ஆனால் ஷைத்தான் நம்மை எவ்வளவு அழகாக ஏமாற்றுகிறான் பாருங்கள். உன் மனோ நிலைகளை மற்றவரிடம் கூற உனக்கு என்ன தேவையுள்ளது? உன் உள சீர்திருத்தத்தை நீயே சுயமாக மேற்கொள்வாயாக! என்ற சிந்தனையை போடுகிறான்.

இது எவ்வாறெனில் உனக்கு உடல் நோய் ஏற்பட்டால், நீ மருத்துவரிடம் செல்ல வேண்டிய என்ன தேவையுள்ளது, உன் நோய்க்கு புத்தகத்தை வைத்து நீயே சிகிச்சை செய்துகொள் என்று கூறுவது போன்றாகும். இதுபோன்று யார் தனக்குத்தானே வைத்தியம் செய்து கொள்கிறாரே அவர் மிக விரைவில் மரணமடைவார் என்பது உறுதி.

## புத்தகம் பார்த்து வைத்தியம் செய்தல் புத்தியுள்ளவருக்கு அழகல்ல:-

ஒரு மருத்துவர் நோயுற்றால்கூட அவர் மருத்துவம் அறிந்தவராக இருந்தும் சுயமே மருத்துவம் செய்து

கொள்ளாமல் வேறு ஒரு மருத்துவரிடம் ஆலோசனையும், சிகிச்சையும் பெற எண்ணுகிறார். எனக்கு இவ்வாறு இவ்வாறெல்லாம் உள்ளது. இது இந்த நோய்க்கான அறிகுறியா என்று கலந்தாலோசிக்கிறார். ஏனெனில், தன் சம்பந்தமான ஒருவரின் எண்ணம், பெரும்பாலும் தவறாகவே இருக்கும்.

அவ்வாறே உளநோயிலும் தமக்குத்தாமே மருத்துவம் செய்தல் ஆபத்தானது. மனித நப்ஸானது அவன் சார்ந்த விஷயங்களை எப்போதும் அவனுக்கு அலங்கரித்தே காட்ட முற்படும். எனவேதான் பெரும்பாலும் தான் செய்யும் பாவம் பாவமாகவே தெரியாது. தன்னுடைய சிறிய நலவும் மிகப்பெரியதாகவே தெரியும். ஆக தனக்குத்தானே சிகிச்சையளித்துக்கொள்வது மிக ஆபத்தான ஒன்றாகும்.

ஒரு நபருடைய மகனுக்கு வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. அவருடைய மனைவி அவனை மருத்துவரிடம் அழைத்து செல்லும்படி அல்லது மருந்து வாங்கி வரும்படி தன் கணவரை வற்புறுத்தினாள். ஆனால் அவரிடம் பணம் குறைவாக இருந்ததால் மருத்துவர் ஃபீஸ் மேலும் மாத்திரை செலவு என்ற இரண்டு செலவுக்கு பயந்து ஏதேனும் ஒரு மருந்துக் கடையில் மாத்திரை வாங்கி வந்தால் செலவு மிச்சமாகும் என்று எண்ணி மருந்துக் கடைக்கு சென்றார்.

மருந்துக் கடைக்காரரிடம், என் மகனுக்கு பேதி மாத்திரை கொடுங்கள் என்று கேட்டார். பேதி மாத்திரை என்றால் மருத்துவ சொல் வழக்கில் பேதி செல்வதற்கு கொடுக்கப்படும் மாத்திரையைக் குறிக்கும். வயிற்றுப் போக்கை நிறுத்த மாத்திரை கொடுங்கள் என்று அவர் கேட்டிருக்க வேண்டும்.

அவர் பேதி மாத்திரையை வாங்கி வந்து கொடுக்க அதை சாப்பிட்ட மகனுக்கு மீண்டும் அதிகமாக வயிற்றுப்

போக்கு ஏற்பட ஆரம்பித்து முடியாத நிலையை அடைந்து விட்டான். பிறகு மருத்துவரிடம் அவனை அழைத்துச் சென்று சிகிச்சை செய்த பின் ஒரு வழியாக அவன் உயிர் பிழைத்துக் கொண்டான். அந்த மருத்துவர் அவரிடம் நீங்கள் இச்சிறுவனுக்கு என்ன கொடுத்தீர்? இவ்வளவு நிலைமை மோசமாக ஆனதற்கு என்ன காரணம் என்று கேட்டார்.

அதற்கு அவர், நான் இவனுக்கு வயிற்றுப் போக்கு ஏற்பட்டவுடன் மருந்துக் கடையிலிருந்து பேதி மாத்திரை வேண்டும் என்று கூறி வாங்கி வந்துக் கொடுத்தேன் என்றார். அதற்கு அந்த மருத்துவர், முட்டாளே! பேதி மாத்திரை என்றால் வயிறு சுத்தமாக வயிற்றுப் போக்கு ஏற்பட கொடுக்கும் மாத்திரைக்கே சொல்லப்படும். அவனுக்கோ ஏற்கனவே வயிற்றுப் போக்கு ஏற்பட்டிருந்ததால் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது என்றார். ஆக நமக்கு ஏற்பட்ட நோய்க்கு நாமே வைத்தியம் செய்ய எண்ணினால் நிலைமை இவ்வாறு தான் மோசமாகிவிடும் என்பதை நன்கு உணர்ந்துக் கொள்ளுங்கள்.

தனக்குள்ள நோயுக்கு தாமே சிகிச்சையளித்துக் கொள்பவரின் நிலையும் இதைப்போன்றதே. எந்த மருத்துவரின் மாத்திரையால் நோய் அதிகமானதோ அவரிடத்திலே மீண்டும் மாத்திரை வாங்கினால் நிலை என்னாவது? இவ்வாறுதான் நமது நப்ஸானது இன்பங்கள் அனைத்தையும் பூர்த்தியாக்க ஆசைகொள்ளும். அவ்வாறிருக்க அதன்கூற்றை நம்பி சிகிச்சையில் இறங்கினால் இறப்பு உறுதிதான். எனவேதான் வேறொரு மருத்துவரின் தேவை கட்டாயம் உள்ளது.

## நான்கு விதமான மருத்துவமுறைகள்:-

உடல் நோயை குணப்படுத்த பலவிதமான மருத்துவ முறைகள் உள்ளன. அவற்றை யூனானி, அலோபதி, ஹோமியோபதி, அக்குபஞ்சர் என்ற பலபெயர்களில் அழைக்கின்றனர். அவ்வாறே மருத்துவமுறைகளிலே அக்குபஞ்சர் என்பது ஒரு அபூர்வமான, வித்தியேசமான மருத்துவ முறையாகும். என்ன ஆச்சரியம்! ஓரிரு இன்ஞ்சு உள்ள ஊசிகளை உடலில் குத்திவிடுகின்றனர். சிறிது நேரத்தில் வலி குணமாகிவிடுகின்றது. தூக்கம் வராத நபருக்கு இம்மருத்துவர் ஒரு ஊசி போடுவார். அவர் போதை ஏற்பட்டவரை போல் உறங்க ஆரம்பித்துவிடுவார். இதுவும் நான்கு முக்கிய மருத்துவமுறைகளில் ஒன்றாகும்.

இந்த நான்கில் எம்முறையில் வேண்டுமானாலும் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம். ஆக மொத்தம் அவர் நோயிலிருந்து நிவாரணம் பெறுவதே நோக்கமாகும். இதைப்போன்றே அல்லாஹ் உளநோய்களுக்கும் வேறுபட்ட மருத்துவ முறைகளை வைத்துள்ளான். அவ்வாறான ஆன்மீக மருத்துவமுறைகளைத் தான் நக்ஷபந்தியா, சிஷ்தியா, காதிரிய்யா, சுஹ்ரவரிதிய்யா என்பதாக அழைக்கின்றனர். இவற்றில் சில முறைகளில் இரகசிய திக்ரின் மூலம், வேறு சில முறைகளில் சப்தமான திக்ரின் மூலம் உளமருத்துவம் மேற்கொள்ளப்படுகிறது.

ஆக இந்த அனைத்து மருத்துவ முறைகளும் சத்தியமானதே. இவற்றின் மூலம் கட்டாயம் ஒரு உளநோயாளி குணமடைவார். உடல்நோய் சிகிச்சைக்குப் பின் ஒருவர் ஆரோக்கியமான உணவு உட்கொள்ள ஆரம்பித்தால் உடல் ஆரோக்கியமடையும், உடலில் ஆற்றல் பிறக்கும். நோயுற்ற மனிதனுக்கு பிரட்டும்,

பழவகைகளும், ஜூஸ்களும் கொடுக்கின்றனர். ஏனெனில் இதனால் உடலில் ஒருவகையான ஆற்றல் உருவாகும். அவ்வாறே உளநோயாளிக்கு திக்ரின் மூலமாக கிடைக்கும் பிரகாசங்கள், நிம்மதி போன்றவை அவன் உள்ளத்தை நன்கு வளமாக்கும்.

மனித உடல் மண்ணிலிருந்து படைக்கப்பட்டிருப்பதால் அதன் தேவைகளனைத்தும் மண்ணிலிருந்தே பூர்த்தியாகின்றன. ஆனால் மனித ஆன்மாவானது இறைவனிடமிருந்து வந்துள்ளதால் அதற்குண்டான தேவைகளனைத்தும் அவனிடமிருந்தே பூர்த்தியாகும். எனவேதான் மனநிம்மதி, மன அமைதி இறங்கக்கூடிய மார்க்க சபைகளில் அமர்வது அவனது உளநோய்களுக்கு சிறந்த நிவாரணி என்பதாகக் கூறப்பட்டுள்ளது.

## சிகிச்சையில் தாமதித்தால் சிக்கல் அதிகமாகும்!

உடல் நோய்வாய்ப்பட்டவருக்கு சரியான சிகிச்சை மேற்கொள்ளவில்லையெனில் அவன் உயிரிழக்க நேரிடும். அவ்வாறே உளநோயாளிக்கும் தகுந்த சிகிச்சை மேற்கொள்ளப்படாத போது அவனுடைய உள்ளத்திலுள்ள ஈமான் பறிபோய்விடும். இவ்விரண்டு நோய்களுக்கு மத்தியிலுள்ள அநேக ஒற்றுமைகளில் இதுவே மிக முக்கியமானதாகும். எத்தனையோ நபர்கள் துணிச்சலாக சில வார்த்தைகளை கூறிவிடுகின்றனர். அதனால் ஈமானை பறிகொடுத்து நிற்கும் துர்பாக்கிய நிலைக்குச் சென்றுவிடுகின்றனர்.

ஒரு முதலாளி தன் தொழிலாளியை அழைத்து அவனுடைய காதில் ஏதோ ஒரு விஷயத்தைக் கூறினார். அதனைக்கேட்ட தொழிலாளி அல்லாஹ் பாதுகாப்பானாக! என்று கூறியவராக

நடுநடுங்கிவிட்டார். அது என்னவென்றால். முன்பெல்லாம் அல்லாஹ் ஐந்தே நிமிடத்தில் துஆவை ஏற்று உதவிபுரிந்து வந்தான். தற்போது பல வருடங்கள் தொழுது கேட்டாலும் அவனுடைய காதில் விழுவதேயில்லை போன்று தெரிகிறது என்று கூறினார். இவ்வாறான துணிச்சலான சில பேச்சுக்களினால் அடியானின் ஈமான் பறிக்கப்பட்டு விடும்.

உடல்நோய்க்கான சிகிச்சையில் கவனக்குறைவு அவனை அபாய நிலைக்கு கொண்டு சேர்ப்பதைபோல் உளநோய்க்கான சிகிச்சையில் கவனக்குறைவும் ஈமானுடைய விஷயத்தில் அடியானை அபாய நிலைக்குக் கொண்டு சென்றுவிடும். எனவே உடல் நோய்க்கான சிகிச்சையை விட ஒருவன் தன் உளநோய்க்கான சிகிச்சையில் அதிகம் முக்கியம் காட்டுவது மிக அவசியமாகும்.

## அறிகுறிகளால் பிணி அறிவோம்:-

உடல் நோயைக் கண்டறிவதற்கு பல அறிகுறிகள் உள்ளன. உதாரணமாக ஒருவருக்கு இரத்தக்கொதிப்பு ஏற்பட்டால் அடிக்கடி தலை சுற்றல் ஏற்படும், முகம் சிவக்கும், எதற்கெடுத்தாலும் கோபம் வரும். இதுபோன்ற அறிகுறிகளை பார்க்கும் மருத்துவர் உங்களுக்கு இரத்தஅழுத்தம் இருப்பதாக கூறுவார். அவ்வாறே ஒருவருக்கு அடிக்கடி சிறுநீர் வந்துக்கொண்டேயிருந்தால் அவருக்கு சர்க்கரை நோய் இருப்பதாக கூறுவார். சிலருக்கு சிறிது தூரம் நடந்தாலே மூச்சு இறைக்க ஆரம்பித்துவிடும். இவ்வாறானவர்கள் பெரும்பாலும் இருதய பிரச்சினை கொண்டவராக இருப்பார்.

மேலும் ஒருவருக்கு உடல் நோய் ஏற்பட்டால் எந்தவேலை செய்வதற்கும் இயலாதவராகிவிடுவார். அவ்வாறே

உளநோயால் பாதிக்கப்பட்டுள்ளவருக்கும் அமல்கள் செய்வதில் சோம்பல் ஏற்படும். தொழுவதற்கு மனம் விரும்பாது, குர்ஆன் ஓதுவது இன்னும் கடினமாகத் தோன்றும். இரவுத் தொழுகைக்கு எழுவது அபூர்வம், உண்மை பேசுவது மிக பாரமானது, தன் தவறை ஒத்துக்கொள்வது ஆக சிரமத்திலும் சிரமம், யார் எனக்கு புரிய வைக்கிறாரோ அவரே என் முதல் எதிரி என்ற எண்ணம் தோன்றும், அவர் தன் சகோதரியிடம் தொழக்கூறினால் முதலில் உன் மனைவியை தொழக்கூறு என்று அவள் பதில் கூறுவாள். நான் தொழுவதில்லையே என்று ஒத்துக்கொள்ள மனம் வராது. இப்படிப்பட்ட செயல்பாடுகளனைத்தும் ஒருவர் உளநோயால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கான அடையாளங்களாகும்.

## சில்சிலா என்றால் என்ன?

உண்மையில் சில்சிலா என்பது தலைசிறந்த ஆன்மீக மருத்துவர்களின் தொடராகும். அதாவது உளநோய்களை திறம்பட எதிர்கொண்டு, அதற்கான சிகிச்சையில் அனுபம் வாய்ந்த மருத்துவர்களின் தொடராகும். இந்த அனைத்து மருத்துவர்களுடைய உண்மையான ஆசான் நபி ﷺ அவர்களேயாவார்கள். நபி ﷺ அவர்களிடமிருந்து இந்த ஆன்மீக மருத்துவத்தை சஹாபாக்கள் கற்றனர். இச்சஹாபாக்களும் ஆரம்பத்தில் உளநோயாளிகளாகவே இருந்தனர். பிறகு நபி ﷺ அவர்களின் தொடர்படியான அரவணைப்பில் இருந்தமையால் பரிபூரண குணமடைந்தார்கள்.

தான் குணமடைந்ததோடு இருந்து விடாமல் எல்லா உளநோயாளிகளுக்கும் மருத்துவம் பார்க்கக்கூடிய ஆன்மீக மருத்துவர்களாக, சிகிச்சை செய்பவர்களாக

பிற்காலத்தில் மாறிவிட்டனர். நபி ﷺ அவர்களின் ஒரு பார்வையே போதும் இறந்தவரை உயிர்பித்து உலாவ வைத்துவிடும், என்ற கூற்றிற்கு ஏற்ப நபித்தோழர்கள் தலைசிறந்த உளவைத்தியர்களாக மாறி பல்வேறு பகுதிகளுக்கு பிரிந்து சென்றனர்.

இவர்களிடமிருந்து தாபியீன்களும், பிறகு தாபியீன்களிடமிருந்து தபே தாபியீன்களுமாக இந்த தொடர் வந்துக்கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு மாணவரும் அடுத்து வரும் தலைமுறைக்கு அதைக் கற்பிக்கும் ஆசானாக மாறிவிடுகிறார். இவ்வாறாக உளமருத்துவத்துறை தொன்றுதொட்டு நம்வரை பாதுகாப்பாக வந்தடைந்துள்ளது. மக்கள் தங்களுடைய வம்சாவழியை பெரும்பாலும் நினைவில்வைப்பதை முக்கியமென கருதுகின்றனர்.

நாங்கள் ஹஸனி, ஹுஸைனி, சைய்யித் என்பதாக கீழிலிருந்து மேலாக நபி ﷺ அவர்கள் வரை வம்சாவழியை நினைவில்வைத்துள்ளனர். இவ்வாறே நமது ஆன்மீக வைத்தியர்களின் வழித்தொடரும் நம்வரை எவருடைய பெயரும் விடுபடாமல் பாதுகாப்பாக உள்ளது. இன்னார், இன்னாரிடத்தில், பிறகு அவர் இவரிடத்தில் இதைக்கற்றார் என்று நபி ﷺ அவர்கள் வரை நம்மால் கூறமுடியும்.

## ஆசானில்லாத கல்வி-அஸ்திவாரமில்லாத கட்டிடமாகும்:-

தீன் என்பது கற்றுக்கொள்வதின் மூலமே வாழ்வில் வரக்கூடியதாகும். எவரிடத்திலும் அது சுயமேவராது. இன்றைய நவீன காலத்தில் மக்கள் இணையதளங்களின் வழியாக தீனை கற்றுக்கொள்கின்றனர். மேலும் பலரோ வெறும் செவிவழிசெய்தியாக இன்னார் இதைக்கூறினார் என்பதாக முறையான எந்த ஆசிரியருமின்றி மார்க்கம் பேசுபவர்களாக உள்ளனர்.

இங்கும், அங்குமாக பத்திரிக்கைகளில் படித்து தன்னை தீன் தெரிந்தவராக பறைசாற்றுபவர்களாகவே இக்காலத்தில் மிகுதியாக உள்ளனர். நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள் முறையான ஆசிரியரின்றி கல்வி ஞானம் கற்றவர் அஸ்திவாரம் இன்றி கட்டிடம் எழுப்புகின்றவரை போன்றவராவார். அவர் தெளிவற்றவராக, உறுதியற்றவராகவே இருப்பார். எனவேதான் இக்கால உலமாக்களில் பலரும் சற்றும் யோசிக்காமல் தஸவ்வுஃப் என்ற ஆன்மீக துறையை பித்அத் என்று கூறிவிடுகின்றனர். இந்த உளநோய்க்கான உன்னத சிகிச்சை முறையை பித்அத் என்று கூறுவது எவ்விதத்தில் நியாயமாகும்?

உங்களிடம் கடுகளவு பெருமையிருந்தாலும் கட்டாயம் சுவனம் புக முடியாது என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளதை அறிவோம். பெருமை என்பது ஒரு உளநோயாகும். சரி, பெருமை நீக்குவதற்கு என்ன வழி உள்ளது? என்று யோசித்தால் ஆன்மீக மருத்துவ முறையான தஸவ்வுஃபில் மட்டுமே அதற்குரிய மருந்து கூறப்பட்டுள்ளது. எனவே அம்மருத்துவ வழியான தஸவ்வுஃபை எவ்வாறு பித்அத் என்று கூற முடியும்?

## மனநோய்களுக்கான மாத்திரைகள்:-

குர்ஆன்-ஹதீஸை ஆய்வு செய்த உலமாக்கள் சில அமல்களை மாத்திரைகளைப் போன்று தொகுத்து கொடுத்துள்ளனர். அவற்றை கடைப்பிடிப்பதின் மூலம் இன்ஷாஅல்லாஹ் நிவாரணம் ஏற்படுமென்றும் கூறியுள்ளனர். இம்மருந்தின் அடிப்படையை ஆய்வு செய்தால் அது அல்லாஹ் மேலும் ரஸூலின் வார்த்தைகளாக இருப்பதை அறியலாம்.

அதாவது நம்முடைய வழிமுறைகளில் எவராவது பைஅத் பெற்றால் நாம் அவருக்கு ஆறு விஷயங்களை அவசியம் கடைபிடிக்க வலியுறுத்துவோம். இந்த ஆறு விஷயங்களும் கூட குர்ஆனிலிருந்தே எடுக்கப்பட்டவைகளாகும். நம்முடைய ஆன்மீக குருமார்கள் தங்களுடைய பிரகாசமான ஈமானிய ஒளியால் அம்மருந்துகளை கண்டறிந்து நமக்கு வழங்கியுள்ளனர்.

## 1] ஸலவாத் ஓதுவது

ஆரம்பமாக 100 முறை காலை, மாலை தரூத் (ஸலவாத்) ஓதக்கூறுவோம். அதாவது நபியின் மீது ஸலவாத், ஸலாம் கூறுவதாகும். இது குர்ஆனில் உத்தரவிடப்பட்டதை நிறைவேற்றக்கூடியதல்லவா?

إِنَّ اللهَ وَ مَلَائِكَتَهُ يُصَلُّوْنَ عَلَى النَّبِي يَا أَيُّهَا الَّذِيْنَ آمَنُوْا
صَلُّوْا عَلَيْهِ وَسَلَّمُوْا تَسْلِيْماً

அல்லாஹ்வும், அவனது மலக்குகளும் நபி ﷺ அவர்களின் மீது அருள் இறங்க வழிவகை செய்கின்றனர். எனவே நம்பிக்கையாளர்களே! நீங்களும் நபி ﷺ அவர்களின் மீது ஸலாத்தும், ஸலாமும் கூறக்கூடியவர்களாக இருங்கள். (அருள் இறங்க இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்)

இந்த வசனத்தில் வந்துள்ள ஸலவாத் ஓதுங்கள் என்ற கருத்து ஏவல் வாக்கியத்தில் வந்துள்ளது. எனவே காலை, மாலை ஸலவாத் ஓதக்கூடிய ஒருவர் குர்ஆனின் உத்தரவை பின்பற்றுகிறார் என்றே அர்த்தமாகும். இது எவ்வாறு பித்அத்தாகும்?.

இதுமட்டுமல்லாது ஏராளமான ஹதீஸ்களிலும் ஸலவாத் ஓதுவதின் பலாபலன்களும், சிறப்புகளும் கூறப்பட்டுள்ளன.

இன்னும் இங்குள்ள ஏவல் வாக்கியத்தின் ஏவலுக்கிணங்க உண்மையில் நாம் அனைவரும் நபி ﷺ அவர்களின் மீது ஸலவாத் ஓதுவதைக் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும் என்றல்லவா கூற வேண்டும்?

## 2] இஸ்திங்ஃபார் ஓதுவது

இரண்டாவதாக காலை, மாலை 100 தடவை இஸ்திஃஃபார் ஓதும்படி கூறுகின்றோம். இஸ்திஃஃபார் செய்வது சம்பந்தமாகவும் குர்ஆனில் உத்தரவு வந்துள்ளது.

اَسْتَغْفِرُوْا رَبَّكُمْ إِنَّهُ كَانَ غَفَّارًا

உங்கள் இறைவனிடம் மன்னிப்பு கோருங்கள் ஏனெனில் நிச்சயமாக அவனே மன்னிக்கக்கூடியவனாக இருக்கின்றான். இதிலும் மன்னிப்புக் கேளுங்கள் என்ற கருத்து ஏவல் வாக்கியத்தில் வந்துள்ளது. ஒரு நபரிடம் காலை, மாலை இஸ்திஃஃபார் செய் என்று நாம் கூறினால் அது எவ்வாறு பித்அத்தாக ஆகும். இது குர்ஆனின் உத்தரவை பின்பற்றி செயல்படு என்று வேண்டுகோள் வைப்பதாகத்தானே புரிந்து கொள்ளப்படும்!

## 3] குர்ஆன் ஓதுவது

மூன்றாவதாக குர்ஆனை தினமும் குறிப்பிட்ட அளவு ஓதிவாருங்கள் என்கிறோம். இது சம்பந்தமாகவும் அல்லாஹ் தன் வேதத்தில்

فَاقْرَءُوْا مَا تَيَسَّرُ مِنَ الْقُرْآنِ

"குர்ஆனில் உங்களுக்கு ஏதுவானதை ஓதிவாருங்கள்" என்று உத்தரவிட்டுள்ளான். ஒரு நபரிடத்தில் நீ தினமும் குர்ஆனிலிருந்து ஒரு ஜுஸ்வு அல்லது அரை ஜுஸ்வு

ஓதி வா என்றால் அது எப்படி பித்அத்தாகும்? இதுவும் குர்ஆனின் உத்தரவை செயல்படுத்த தூண்டுவதுதானே!

## 4] திக்ரில் திளைத்திருத்தல்

நான்காவதாக நிற்கும்போதும், நடமாடும்போதும், அமர்ந்து, எழுக்கூடிய அனைத்து நிலைகளிலும் அல்லாஹ்வை திக்ரு செய்ய வலியுறுத்துகிறோம். இதுபற்றியும் திருக்குர்ஆனில்

اُذْكُرُوا اللّٰهَ قِيَامًا وَّقُعُوْدًا وَّ عَلَى جُنُوْبِكُمْ

“நீங்கள் நின்றநிலையிலும், அமர்ந்த நிலையிலும் மேலும் உங்கள் விலாக்களின் மீது படுத்து உறங்கும் நிலைகளிலும் அல்லாஹுவை நினைவுகூறுங்கள்” என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதிலும் நினைவுகூறுங்கள் என்ற கருத்து ஏவல் வாக்கியத்தில் வந்துள்ளது.

ஆக இந்த உத்தரவின்படி நடமாடும்போதும், அமரும்போதும், உறங்கும்போதும் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள் என்று கூறப்பட்டால் (உகூஃபே கல்பி) இது எங்ஙனம் பித்அத்தாகும்.

## 5] முராகபா செய்தல்

ஐந்தாவதாக நாம் முராகபா என்று உள்ளத்தில் மறைவான திக்ரு செய்வதற்குக் கூறுகிறோம். இதுவும் குர்ஆனில்

وَاذْكُرْ رَبَّكَ فِيْ نِفْسِكَ تَضَرُّعًا

“மனதில் அமைதியாக அஞ்சி நடுங்கி உம் இறைவனை நினைவு கூர்வாயாக” என்று உத்தரவிடப்பட்ட விஷயமாகும். இவ்வசனம் உளரீதியான சிந்தனைச் செய்வதையே குறிக்கும், என்று குர்ஆன் விரிவுரையாளாக்கள் விளக்கம் கூறியுள்ளார்கள்.

மஆரிபுல் குர்ஆனில் முஃப்தி ஃபீ ﵀ அவர்கள் இந்த வசனத்தில் வரும் அஞ்சி. நடுங்கி நினைவு கூறுங்கள் என்பதன் மூலம் குர்ஆன் உளரீதியான திக்ரை ஊக்குவித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

எனவே எவரிடத்திலாவது முராகபா செய் என்று இந்த ஆயத்தின் படி அமல் செய்ய கூறினால் இது எவ்வாறு பித்அத்தாகும்.

## 6] நல்லோர்களுடன் இருப்போம்

ஆறாவதாக நல்லோர்களின் தோழமையை தேர்ந்தெடுக்கக்கூறுகிறோம். இதுபற்றியும் குர்ஆனில்

كُوْنُوْا مَعَ الصَّادِقِيْنَ

**“உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள்” என்று ஏவல் வாக்கியமாகவே உள்ளது.**

எனவே குர்ஆனின் உத்தரவிற்கிணங்க நடந்துகொள் என்று நாம் கூறினால் அது எப்படி பித்அத்தாகும்?

ஆகமொத்தம் மேற்கூறப்பட்ட ஆறுவிஷயங்களும் குர்ஆனுடைய கட்டளையாகும். இவற்றைச் செயல்படுத்துங்கள் என்று நாம் கூறினால் அது ஒரு போதும் மார்க்கத்தில் புதுமையானது என்று ஒதுக்கப்படமாட்டாது. இவைகளை பித்அத் என்று யாராவது கூறினால் ஒன்று அவன் மடையனாக அல்லது தான் மடையன் என்பதைக் கூட அறியாதவனாக இருக்கிறான் என்றே அர்த்தமாகும். நன்கு விளக்கமுள்ள ஆலிம்கள் எவரும் இவற்றை ஒருபோதும் பித்அத் என்று கூறமாட்டார்கள்.

மாறாக இங்கு கூறப்பட்டவைகள் அனைத்தும் குர்ஆனின் உத்தரவிற்கு வழிபடுவதில் உள்ளது என்றே

கூறுவார்கள். ஆக நம்முடைய ஆன்மீக ஆசான்கள் தங்கள் தரப்பிலிருந்து எதையும் உருவாக்கவில்லை. மாறாக குர்ஆன், ஹதீஸில் சொல்லப்பட்ட அமல்களையே நமக்கு வகுத்துத் தந்துள்ளனர்.

அவர்கள் கூறிய முறைப்படி அமல் செய்யும் போது அல்லாஹ் அதில் பரக்கத் ஏற்படுத்தி உளநோய்ககளுக்கு நிவாரணியாக்குவான்.

இந்த மேற்கூறப்பட்ட ஆறு வழிமுறைகளை முறையாக, நியமமாக செய்து பாருங்கள் உங்கள் வாழ்வில் கட்டாயம் வித்தியாசத்தை உணர்வீர்கள். என் உள்ளித்தில் முன்பை விட இப்போது இறையன்பு மிகுதியாகியுள்ளது என்று நீங்களே கூறுவீர்கள். எனவே நாம் எவ்வாறு உடல் நோய்க்கு சிகிச்சை பெற விரும்புகிறோமோ அவ்வாறே உளநோய்க்கும் சிகிச்சை செய்ய விரும்ப வேண்டும். ஏனெனில் உளநோய்கள் அவசியம் ஒரு மனிதனுக்குள் இருக்கவே செய்யும்.

## ஆன்ம நோய்க்கான ஆதாரங்கள்:-

உளநோய்கள் எல்லோருக்கும் ஏற்பட வாய்ப்புண்டு என்பதற்கு என்ன ஆதாரம் உண்டு? என்று கேட்டால் அதற்கும் குர்ஆனில் ஆதாரம் உண்டு. அல்லாஹ் தன் திருமறையில் நபியின் மனைவிமார்களுக்கு கூறும் சில உபதேசங்களில்,

فَلَا تَخْضَعْنَ بِالْقَوْلِ فَيَطْمَعُ الَّذِيْ فِيْ قَلْبِهِ مَرَضٌ

“நீங்கள் பர்தாவிலே இருங்கள், உங்கள் குரலில் மென்மையை கையாள வேண்டாம். அதனால் உள்ளிதில் நோயுள்ளவர் உங்களைப் பற்றி தவறுதலாக ஆசைக்கொள்ளக்கூடும்” என்று கூறுகிறான். எனவே அந்நியப் பெண்ணைப்

பார்ப்பவர் மேலும் அவள் மீது ஆசையும், தப்பெண்ணமும் கொள்பவர் குர்ஆனுடைய கூற்றின் படி உள்ளத்தில் நோயுள்ளவராவார்.

பள்ளிவாசலை விட்டு வெளியே வந்தவுடன் வழியில் செல்லக்கூடிய பெண்களைத் தேடித் தேடி உற்று நோக்குபவர் உள்ளத்தில் நோயுள்ளவராவார். இவ்வாறு தீய பார்வையைக் கட்டுப்படுத்த இயலாமலிருப்பது அவருடைய உள்ளத்தில் நோய் உள்ளதற்கான அறிகுறியாகும். நம் தீயபார்வையை வேறெவரும் கண்டறிய இயலாது. ஆனால் கண்களின் குளறுபடிகளை அறியக்கூடிய அல்லாஹ் என்ன அறிய இயலாதவனா! ஆக எவரின் பார்வை தன் கட்டுப்பாட்டில் இல்லையோ அவர் சந்தேகத்திற்கு இடமின்றி உளநோயாளியாவார்.

இவ்வாறு பார்வை பேணுதலற்றவர் விமானத்தில் பயணம் செய்ய நேர்ந்தால் விமானப் பணிப்பெண்களை உற்றுநோக்குவார். இரயில், பேருந்தில் பயணம் செய்ய நேர்ந்தால் தன் சக பயணிகளிலுள்ள அந்நிய பெண்களை நோட்டமிடுவார். வழியில் நடந்து சென்றால் அங்குமிங்கும் உலாவக்கூடிய அந்நியப் பெண்களைச் சுற்றியே இவருடைய பார்வை வட்டமிட்டுக் கொண்டிருக்கும்.

அவர் கடைக்காரராக இருந்தால் பொருள் வாங்கவரும் பெண்களை உற்றுப் பார்ப்பார். ஆக நம் பார்வை தவறானதாக, தீயதாக இருந்தால், எதேச்சையாக ஒருமுறை தவறான பார்வை பட்டபின் வேறுபக்கம் திருப்பாமல் மீண்டும் பின் தொடர்கின்றதென்றால் நமக்குள் உளநோயுள்ளது என்பது ஊர்ஜிதமானதாகும்.

தன் பார்வையும் இப்படிப்பட்ட தீய பார்வையாக உள்ளது என்று அறிந்துகொண்டு அதற்குண்டான சிகிச்சையையும்

மேற்கொள்ளவில்லையெனில் அவர் வருத்தப்பட தகுதியானவராவார். தனக்கு உடல் நோயுள்ளதென்று தெரிந்தும் தன்னை நோயாளி என்று புரியாதவரே ஆக ஆபத்தான அபாய கட்டாயத்தை அடையக்கூடிய நோயாளியாவார் என்று மருத்துவர்கள் கூறுவார்கள்.

அதன்படி உளநோயின் அறிகுறியான தீயபார்வை தனக்குள்ளது என்று அறிந்தும் அதற்கான சிகிச்சை மேற்கொள்ளாதவரும் ஆபத்தான கட்டத்தை அடைவார் என்பது உறுதி. ஹெபடைடிஸ் சி (ஈரழற்சி) என்ற நோயால் பாதிக்கப்பட்டவர் நீண்ட காலமாக சிகிச்சை எடுத்துக் கொள்ளாதபோது கை, கால்கள் வலுவிழந்து அபாய கட்டத்தை அடைவார் என்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறே உளநோயின் நிலையும் தனக்கு தீய பார்வையுள்ளது என்று விளங்கிய பின்பும் சிகிச்சை மேற்கொள்ளாதவரின் ஈமானுடைய நிலையும் அபாயத்தில் சென்றே முடியும்.

தீய பார்வையினுள் எத்தனையோ ஆபத்துகள் ஏற்படுகின்றன. அதில் ஒன்றுதான் மரணநேரத்தில் கலிமா சிந்தனைக்கு வராமல் போவதாகும் என்று மார்க்க அறிஞர்கள் எழுதியுள்ளனர். பெரும்பாலும் மரணநேரத்தில் கலிமா மறந்துபோவது தீய பார்வையினாலேயாகும்.

## ஈமானை இழக்கச்செய்யும் இச்சைப்பார்வை

ஒருமுறை நான் என் ஹஜ்ரதிடம் எத்தனையோ பெரும்பாவங்கள் இருக்க அவற்றிற்கெல்லாம் தண்டனையாக இறுதியில் கலிமா நினைவிற்கு வராது என்ற தண்டனை கூறப்படாமல், இத்தீய பார்வைக்கு மட்டும் ஏன் இப்படியொரு தண்டனை கூறப்பட்டுள்ளது

என்று கேட்டேன். அச்சமயத்தில் இது சம்பந்தமாக ஓரிரு சம்பவங்கள் என் நினைவில் பதிந்திருந்தன. அவைகளாவன.

## 1. திருக்குர்ஆனை மறக்கடித்த தீய பார்வை

ஜூனைதுல் பக்தாதீ ﵀ அவர்களின் சீடர்களில் குர்ஆனை மனனம் செய்திருந்த ஒரு சீடர் ஒரு தெரு வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது அவ்வழியாக சென்ற அழகான சிறுவனின் மீது அவரின் பார்வை பட்டது. உடனே தன் ஆசானிடம் இப்படிப்பட்ட அழகான முகங்களுமா நரகில் போடப்படும்? என்று கேட்டார். அதற்கு ஹஜ்ரத் அவர்கள் நீ தீய பார்வை பார்த்துவிட்டாய். உடனடியாக தவ்பா செய் என்றார்கள்.

ஆனால் அவரோ இல்லை. நான் எதேச்சையாகத் தான் பார்த்தேன் என்று தன் தவறை ஒத்துக்கொள்ளவில்லை.

இப்னுல் ஜவ்ஸி ﵀ அவர்கள் கூறுகிறார்கள் அவருடைய இத்தீய பார்வையின் விளைவால் ஏறத்தாழ இருபது வருடங்களுக்குப்பின் அவர் மனனம் செய்திருந்த குர்ஆன் முழுக்க மறந்துபோய்விட்டது.

## 2. பாங்கு சொன்னவர் கலிமா சொல்லமுடியாமலானார்.

இப்னுல் ஜவ்ஸி ﵀ அவர்கள் மற்றொரு சம்பவத்தையும் எழுதியுள்ளார்கள், ஒரு பள்ளியின் முஅத்தின் பாங்கு சொல்வதற்காக பள்ளியின் மினராவில் ஏறியபோது பள்ளிக்கருகிலிருந்த வீட்டைப் பார்த்தார். அவ்வீட்டில் ஒரு அழகான வாலிபப்பெண் இருந்தாள். அவள் மீது இவரது பார்வைப்பட்டது. அவளை ரசிக்க ஆரம்பித்துவிட்டார். இத்தீய பார்வையின் விளைவாக அவரது இறுதி நேரத்தில் ஈமானின்றி மரணிக்கும் நிலை ஏற்பட்டது.

இதுபோன்ற சம்பவங்களைச் சிந்தித்தால் இன்னும் பயம் அதிகரிக்கும். இதென்ன அவ்வளவு பெரிய பாவமா? என்ன ஈமானை இழக்கச்செய்திடுமா? ஏன் இப்படியொரு தண்டனை? இதைவிட பெரிய பாவங்களுக்கெல்லாம் உதாரணமாக அநியாமாக கொலைசெய்தல், திருடுதல் போன்றவைளுக்குக் கூட ஈமானைவிட்டு வெளியேறி விடுவார் என்ற எச்சரிக்கை இல்லாதிருக்க ஏன் தீய பார்வைக்கு மட்டும் இவ்வளவு பெரிய தண்டனை என்று கேட்டேன்.

அதற்கு ஹஜ்ரத் அவர்கள் இது அல்லாஹ்வின் ரோஷம் சார்ந்த விஷயமாகும். எப்போது ஒரு அடியான் அழகான பெண்ணை பார்க்கிறானோ அப்போது அல்லாஹ் அவனிடம் என் அடியானே! அழகை வழங்குபவனான என்னை மறந்துவிட்டு இந்த அழியும் அழகின் பின்னால் ஓடுகிறாயே! என்னைப் பார்க்காமல், என் படைப்புகளின் பால் பார்க்கிறாயே என்று கூறுகிறான். ஆம் இந்த ரோஷ உணர்வு எப்போதுமே சகிக்க இயலாத ஒன்றாகும் என்று கூறினார்கள்.

ஒரு பெண் தன் கணவனின் அனைத்து துன்பங்களையும் சகித்துக்கொள்வாள். ஆனால் அவன் இன்னொரு பெண்ணைப் பார்ப்பதை, பழகுவதை மட்டும் அவளால் சகித்துக்கொள்ள இயலாது. அவ்வாறே அல்லாஹ்வின் ரோஷமும் அமைந்துள்ளது.

மக்கள் எல்லோரிலும் நானே மிகுந்த ரோஷக்காரன். ஆனால் அல்லாஹ் என்னைவிட அதிக ரோஷக்காரன் ஆவான் என்று நபி ﷺ அவர்கள் கூறயுள்ளார்கள். எனவேதான் தீய பார்வை என்பது பெரும் பாவமாக பார்க்கப்படுகிறது. இப்பாவத்தை யாரும் கண்டு பிடிக்க இயலாது. வெளியே பிறருக்குத்தெரியாது. ஆனால்

மனித உள்ளம் நோயுற்றுதுள்ளது என்பதற்கு இதுவே தெளிவான அடையாளமாகும். ஆக, தான் நோயாளி என்று தெரிந்துவிட்டால் சிகிச்சை மேற்கொள்ளவேண்டுமல்லவா?

## ஒரு நேரமாவது ஓர்மையாக தொழுதுள்ளோமா?

நாம் உளநோயால் பீடிக்கப்பட்டுள்ளோம் என்று கூறுவதற்கு இரண்டாவது ஆதாரமாக நம் தொழுகையில் நமக்கு இறை சிந்தனை வருகிறதா அல்லது வேறு புறம்பான சிந்தனைகள் வருகிறதா என்பதை கொண்டு அறிந்து கொள்ளலாம். நாம் ஒவ்வொருவரும் நம் தொழுகை நிலையை நன்கறிந்தவர்கள். தக்பீர் கட்டியது முதல் ஸலாம் கொடுக்கும் வரை இறைவனை பார்ப்பதுபோல் வணங்குவாயாக! என்ற வழிகாட்டலின் படி நம் தொழுகையில் இறை சிந்தனை மட்டுமிருந்தால் நமது உள்ளம் ஆரோக்கியமாக உள்ளது என்பதாக அர்த்தம். இதற்கு நேர்மாற்றமாக தொழ நின்றவுடன் ஏதாவதொரு உலக சிந்தனை வந்து நிலைத்துவிட்டால் நம் உள்ளம் நோய் வாய்ப்பட்டுள்ளது என்று அர்த்தமாகும். பல சந்தர்ப்பத்தில் தொழுகைக்கு வெளியே உலக அழுவல்களில் அல்ல. தொழுகையில் நின்றுகொண்டே அடியான் பாவ சிந்தனையில் மூழ்கிவிடுகிறான். இது நோய் முற்றிய நிலையின் அடையாளமாகும்.

ஒருமுறை நான் ஒரு ஊரில் தொழுகை சம்பந்தமாக பயான் செய்தேன். பயான் முடிந்ததும் தலைமுடி தாடியெல்லாம் நரைத்த வயோதிகர் ஒருவர் என்னை சந்திக்க வந்தார்.நான் இருபத்தாறு வருடங்களாக ஒரு மதரஸாவில் புகாரீ ஷரீப் நடத்திக்கொண்டிருக்கிறேன். தாங்கள் கூறியபடி ஒருமுறைகூட தொழுவதற்குண்டான சந்தர்ப்பம் வாய்க்கவில்லையே என்று கவலையுடன் கூறினார். அவருக்கு சில ஆறுதல்களை கூறி அனுப்பிய

பிறகு, இவர் இன்ன மாற்று சிந்தனைக்கொண்ட மத்ரஸாவின் ஷேகுல் ஹதீஸ் என்று என்னுடன் இருப்பவர்கள் என்னிடம் அவரைப் பற்றி அறிமுகம் செய்தனர்.

இருபத்தாறு வருடங்கள் ஷேகுல் ஹதீஸாக சேவை புரியும் ஒரு நபர் அவருடைய சொல்லின் படி ஒருமுறைகூட ஓர்முக சிந்தனைக்கொண்ட தொழுகை தொழ இயலவில்லை என்கிறார் என்றால், அவ்விதமாக ஓர்முக சிந்தனையுடன் தொழுவதற்கு நாம் எப்போதாவது முயன்றுள்ளோமா? என்று ஒவ்வொருவரும் யோசிக்க வேண்டும்.

அவ்விதமே தொழுவதற்கு அதுபோன்ற நிலை அடைந்த மகான்களிடம் சென்று தொழுகையை நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது நிபந்தனையாகும். ஆக இதுபோன்ற நிலையை கற்றுத்தரக்கூடிய ஒரு கலையே தஸவ்வுஃப்பாகும். அதை எவ்வாறு பித்அத் என்று ஒதுக்க முடியும். உள சுத்தத்தைப்போய் பித்அத் என்று ஒதுக்க ஏதேனும் காரணம் உண்டா!

இறைநல்லடியார்களின் இருப்பிடங்களுக்கு வந்து சிலநாள் தங்கிப்பாருங்களேன். உங்களின் தொழுகை மேலும் உளநிலை எவ்வாறு முன்னேற்றமடைகிறது என்பதை புரிந்துகொள்வீர்கள். எந்தளவு உள்ளத்தில் இறையன்பு பொங்கி எழ ஆரம்பிக்குமென்பதை உங்களால் யூகிக்கவும் இயலாது. சிலநேரம் இரவுத்தொழுகையில் நிற்பீர்கள். ருகூஃ செய்ய மனமே வராது. ஸஜ்தா செய்வீர்கள், ஸஜ்தாவிலிருந்து தலையை உயர்த்த எண்ணமே வராது.

நம் முன்னோர்கள் இவ்விதமே தொழுதுவந்துள்ளார்கள். எனவே உடல் நோய்க்கு சிகிச்சை எவ்வாறு அவசியமோ அதைவிட பன்மடங்கு உளநோய்க்கு சிகிச்சை

செய்வது மிகமிக அவசியமாகும். ஏனெனில் இறுதியில் ஈமானில்லாமல் மரணிப்பது எவ்வளவு ஆபத்தானது என்பதை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

## ஷரீஅத் சட்டங்களின் வகைகள்:-

இதை இன்னொரு கோணத்தில் விளங்கிக்கொள்ளலாம். ஷரீஅத்தின் சட்டங்களில் சில ஏவல் சார்ந்ததாகவும், சில விலக்கல் சார்ந்ததாகவும் இருக்கும். சில செயல்களைப்பற்றி இதை அவசியம் செய்ய வேண்டுமென்பதாகவும் இன்னும் சில விஷயங்களைப்பற்றி இதை அவசியம் தவிர்ந்திருக்க வேண்டுமென்பதாகவும் கூறப்பட்டிருக்கும். ஆக செய்ய ஏவப்பட்டவைகளுக்கு مَأْمُوْرَاتٌ (ஏவல்கள்) என்றும், தடுக்கப்பட்டவைகளுக்கு செய்ய வேண்டாமென்று مَنْهِيَّاتٌ (விலக்கல்கள் என்றும் கூறப்படும்.

அவ்வாறே ஏவப்பட்டவைகளிலும் இரண்டுவிதமான சட்டங்கள் இருக்கும். சில செயல்பாடுகள் வெளிரங்கமான உறுப்புகளுடனும், இன்னும் சில விஷயங்கள் உள்ரங்கமான மனதுடனும் சம்பந்தப்பட்டவையாக இருக்கும். உதாரணமாக தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ், குர்பானி போன்ற அனைத்து செயல்பாடுகளும் வெளிரங்க உறுப்புக்களுடன் சம்பந்தப்பட்டவைகளாகும்.

மேலும் இறைவனைச் சார்ந்திருத்தல் (தவக்குல்), பொறுமை, நன்றியுணர்வு போன்ற விஷயங்கள் பார்வைக்கு தெரியாத, மனதோடு சம்பந்தப்பட்டவைகளாகும். ஆக மார்க்கத்தில் ஏவப்பட்ட சட்டங்கள் சிலவற்றின் தொடர்பு வெளிரங்க உறுப்புக்களுடனும், சிலவற்றின் தொடர்பு உள்ரங்கமான மனதுடனும் சம்பந்தப்பட்டவை என்பது தெளிவாகிறது.

இவ்வாறே விலக்கப்பட்டவைகளின் நிலையும் உள்ளது. அதிலும் இரண்டுவிதமான அம்சங்கள் உள்ளன. ஒன்று வெளிரங்க உறுப்புக்களுடனும், மற்றொன்று உள்ரங்க மனதுடனும் தொடர்புடையவையாக இருக்கும். உதாரணமாக திருடாதீர், மது அருந்தாதீர், கொலை, விபச்சாரம் செய்யாதீர் போன்ற செயல்பாடுகள் அனைத்தும் உறுப்புக்களுடன் சம்பந்தப்பட்ட வெளிரங்க செயல்பாடுகளாகும்.

பொறாமை கொள்ளாதீர், குரோதம், பெருமை கொள்ளாதீர் போன்ற விஷயங்கள் புறப்பார்வைக்கு புலப்படாத உள்ரங்க செயல்பாடுகளாகும். எவரது உள்ளத்தில் எவ்வளவு பொறாமை உள்ளது என்பதை நம் பார்வையால் அறிய முடியாதே!. ஆக ஏவல்கள், விலக்கல்கள் இரண்டுமே இரண்டு விதத்தில் உள்ளன என்பதை விளங்கலாம்.

## ஃபிக்ஹே ளாஹிர், ஃபிக்ஹே பாதின்:-

எந்தெந்த ஏவல், அல்லது விலக்கல் சம்பந்தப்பட்ட செயல்பாடுகளின் தொடர்பு வெளிரங்கமானதோ, புற உறுப்புக்களுடன் தொடர்புடையதோ அதற்கு மார்க்க சொல் வழக்கில் ஃபிக்ஹ் என்றும், ஃபிக்ஹுல்லாஹிர் (புறச்சட்டங்கள்) என்றும் கூறப்படும். அவ்வாறே எந்தெந்த ஏவல் அல்லது விலக்கல் சம்பந்தப்பட்ட காரியங்களின் தொடர்பு அந்தரங்கமானதோ, மனதுடன் தொடர்புடையதோ அதற்கு தஸவ்வுப் என்பதாகவும், ஃபிக்ஹுல் பாதின் (அகச்சட்டங்கள்) என்பதாகவும் கூறப்படும்.

ஃபிக்ஹின் இவ்விரு வகைகளைப் புரிவதில் என்ன சிக்கல் உள்ளது? ஆக மனிதன் தன் உள்ளத்தை ஆட்கொண்டுள்ள பிணிகளிலிருந்து அகன்று, தன் மனதை சுத்தமாக்க முயல்வது மிக அவசியமும், அடிப்படை நோக்கமாகும்.

உதாரணமாக ஆடையில் அசுத்தம் பட்டால் அதை நீக்குவதற்கு பல வழிமுறைகள் உள்ளன. முதலில் தண்ணீர் ஊற்றி, பிறகு சோப்பு போட்டு நன்கு துவைத்து இறுதியாக ஆடையை பிழிந்து, தண்ணீரை வெளியாக்குவோம். இவ்வாறான முறையை கையாளும்போது அத்துணியில் உள்ள அசுத்தம் நீங்கி நன்கு சுத்தமாகிவிடும்.

இதுபோன்றே பாவங்களின் காரணமாக உள்ளமும் அசுத்தமாகிறது. உள்ளத்தில் பதிந்த பாவக்கறையை போக்கி உள்ளத்தைச் சுத்தப்படுத்தும் முறைக்கே தஸவ்வுஃப் என்று கூறப்படும்.

## பரிசுத்தமான உள்ளம் கொண்டவரே பாக்கியவான்!

உளப்பரிசுத்தத்தின் முக்கியத்துவத்தை அல்லாஹ் தன் வேதத்தில் விளக்கியுள்ளான்.

قَدْ اَفْلَحَ مَنْ تَزَكّٰي

“தன் உள்ளத்தை சுத்தப்படுத்தியவர் நிச்சயம் வெற்றியடைந்துவிட்டார்” என்று ஓரிடத்தில் கூறியுள்ளான். எம்மனிதன் தன் உள்ளத்திலிருக்கும் அழுக்குகளை சுத்தம் செய்கின்றானோ அவனே வெற்றியடைவான் என்று ஏழு விஷயங்களின் மீது சத்தியமிட்டுக் கூறியுள்ளான்.

நம்பத்தகுந்த நபரின் ஒரு சத்தியமே மகத்தானது, என்றிருக்க இரண்டு, மூன்றைத் தாண்டி ஏழு விஷயங்களின் மீது சத்தியம் செய்தல் என்பது மனப்பரிசுத்தத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கேயன்றி வேறில்லை.

وَالشَّمْسِ وَضُحٰىهَا

**“சூரியன் மேலும் அதன் தெளிந்த வெளிச்சத்தின் மீது**

**சத்தியமாக. மனதை பரிசுத்தப்படுத்தியவனே சத்தியமாக திட்டமாக வெற்றிபெற்றுவிட்டான்" என்றும் கூறியுள்ளான்.**

நபி ﷺ அவர்கள் தூதராக அனுப்பப்பட்டதற்கான நான்கு முக்கிய நோக்கங்களில் ஒன்றாக மக்களை பரிசுத்தப்படுத்துவதும் கூறப்பட்டுள்ளது.

هُوَ الَّذِي بَعَثَ فِي الْاُمِّيّنَ رَسُوْلًا مِنْهُمْ يَتْلُوْ عَلَيْهِمْ اٰيَاتِهِ وَ يُزَكِّيْهِمْ وَ يُعَلِّمُهُمُ الْكِتَابَ وَ الْحِكْمَةَ

**அவர்களுக்கு வேதத்தை ஓதிக்காட்டவும், மேலும் அவர்களை சுத்தப்படுத்துவதும், வேதத்தையும், ஹிக்மத்தையும் கற்றுக்கொடுப்பதற்கும் தூதரை உம்மிய்யீன்களில் அவனே அனுப்பியுள்ளான்.**

இதன்மூலம் ஒவ்வொரு மனிதனும் தன் மனப்பரிசுத்தத்திற்காக பாடுபடவும், உளப்பரிசுத்தத்தை அடையும் வழிகளில் முயன்றுகொண்டே இருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

## ஷரீஅத், தரீகத் கல்வி:

இதே கருத்தை வேறு ஒரு கோணத்தில் விளக்குகிறேன். நன்கு கேளுங்கள். நபி ﷺ அவர்கள் தன்னுடைய இரண்டு நடைமுறைகளை சமூகத்திடம் விட்டுச்சென்றுள்ளார்கள். அவற்றில் ஒன்றிற்கு நபித்துவ போதனைகள் என்பதாகவும், மற்றொன்றிற்கு நபித்துவ உணர்வுகள் என்பதாகக் கூறப்படும்.

நபித்துவ போதனைகள் சம்மந்தப்பட்ட துறைக்கு ஷரீஅத் கல்வி என்றும், நபித்துவ உணர்வுகள் சம்மந்தப்பட்ட துறைக்கு தஸவ்வுஃப் கல்வி என்றும் அழைக்கப்படும்.

ஆக தஸவ்வுஃப் என்ற வார்த்தை உங்களுக்கு அலர்ஜி என்றால் தஜ்கியா என்றோ அல்லது இஹ்ஸானுடைய கல்வி என்றோ அழைத்துக்கொள்ளுங்கள். ஆக மொத்தம் اِحْسَانٌ குர்ஆன், ஹதீஸில் இடம்பெற்ற வார்த்தை என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

وَ اللّٰهُ يُحِبُّ الْمُحْسِنِيْنَ

முஹ்ஸினீன்களை அல்லாஹ் நேசிக்கிறான் என்பதாக குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அவ்வாறே தஜ்கியா என்பதும் குர்ஆனில் உள்ள வார்த்தையாகும். ஆக தாங்கள் விரும்பிய பெயரில் அழைத்துக்கொள்ளவும்.

ஆனால் அல்லாஹ் விரும்பும் பெயருக்கே நிரந்தர அங்கீகாரம் கிடைக்கும். அவ்வகையில் தஸவ்வுஃப் என்ற பெயரே அதிகப்பிரபல்யமானது. முற்காலத்தில் இதற்கு இஹ்ஸான் கல்வி என்றும் தஜ்கியா கல்வி என்றும் கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் தஸவ்வுஃப் என்ற சொல் பிரபல்யமாகிவிட்டது. பெயரில் என்ன பிரச்சனை வந்துவிடப்போகிறது. உண்மையில் அசல் என்னவென்று பார்க்க வேண்டுமல்லவா?

ஒரே பொருளை ஒருவர் A என்றும் மற்றவர் B, மற்றவர் நீ என்பதாக பெயரிட்டு அழைத்தால் அசல் பொருளில் எந்த மாற்றமும் ஏற்படப்போவதில்லை. பெயர்தான் வேறுபட்டுள்ளதே தவிர அசலில் எந்த மாற்றமும் நிகழவில்லை. அதன்படியே தஸவ்வுஃப் என்பதும் ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும். அதை எப்பெயர் சொல்லி அழைத்தாலும் சரி, அதன் உண்மைத்துவத்தில் எந்த மாற்றமும் வரப்போவதில்லை. எனவே இப்பெயர் மாற்றத்தை வைத்து அசலையே ஏற்காமல் இருப்பது அநீதியாகும்.

## அடிப்படைக் கடமையே அரைகுறையாக:-

தஸவ்வுஃபை மறுக்கும் நபர்களுக்கு ஓர்முக சிந்தனை கொண்ட தொழுகைத் தொழ வாய்ப்பே கிடைக்காது என்பது நிதர்சன உண்மையாகும். இவ்வகையான மறுப்பாளர்கள் ஏதோ தொழுவார்கள். ஆனால் மனதில் பலவகையான சிந்தனைகளுடன்தான் தொழுவார்கள். அவர்கள் இத்துறையை மறுத்து அரைகுறையான தொழுகைகளையே தன் இறைவனின் சந்நிதானத்திற்கு அனுப்ப விரும்பினால் அது அவரவர் விருப்பமாகும்.

நாம் நம்மீது அடிப்படைக் கடமையாக இருக்கும் தொழுகையையாவது குறைந்தபட்சம் நல்ல முறையில் நிறைவேற்ற நாடவும், கற்றுக் கொள்ளவும் ஆசைக்கொள்ள வேண்டாமா?

ஒருமுறை ஷாஹ் இஸ்மாயீல் ஷஹீத் ﵀ அவர்கள் தங்களின் ஆன்மீக குருவான ஸய்யத் அஹ்மத் ஷஹீத் ﵀ அவர்களின் சமூகத்திற்கு வந்து ஹஜ்ரத்! நான் என் வாழ்நாளில் ஒரேயொரு தொழுகையாவது ஸஹாபாக்களை போன்று தொழ நாடியுள்ளேன். அதைக்கற்றுக்கொள்ளவே தங்களிடம் வந்துள்ளேன் என்று கூறினார்கள். இதுதான் நாம் செய்யும் பைஅத்தின் நோக்கமும் கூட! எவ்வளவு அழகான வேண்டுகோள் பாருங்கள்! இதைக்கேட்ட ஸய்யத் அஹ்மத் ﵀ அவர்கள், நல்லது இன்று இரவு நம்மிடம் தங்குங்கள் என்று கூறினார்கள்.

இரவின் கடைசிப்பகுதி ஆனபோது ஹஜ்ரத் அவர்கள் என் பெயரை கூறி என்ன இஸ்மாயீல்! எழுந்துவிட்டீரா? என்றார்கள். நான் வேகமாக படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்துகொண்டு ஆம் எழுந்துவிட்டேன், என்று கூறினேன். பிறகு ஹஜ்ரத் அவர்கள் என்னிடம் அல்லாஹ்வுக்காக

உழு செய்யவும் என்று கூறினார்கள். இஸ்மாயீலே! அல்லாஹ்வுக்காக உழு செய்யவும் என்று ஹஜ்ரத் கூறிய வார்த்தையால் அல்லாஹ்வின் சிந்தனை என் மனதில் ஓட ஆரம்பித்தது. நான் உழு செய்துக்கொண்டேயிருந்தேன்.

ஆனால் என் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த இயலவில்லை. ஒருவாராக உழு செய்து விட்டு ஹஜ்ரத் உழு செய்துவிட்டேன் என்று கூறினேன். அல்லாஹ்வுக்காக இரண்டு ரக்அத் தொழுவீராக என்று மீண்டும் கூறினார்கள். மறுமுறை நான் செவியுற்ற அல்லாஹ்வுக்காக என்ற இவ்வார்த்தை எனக்குள் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

நான் தொழுகையில் தக்பீர் கட்டியது முதல் ஸலாம் கொடுக்கும் வரை என் எண்ணம், சிந்தனை ஆகியனைத்தும் அல்லாஹ்வின் ஞாபகத்திலேயே திளைத்திருந்தது. நான் என் இறைவன் முன் உள்ளதாக, அவன் என்னை பார்ப்பதுபோன்ற ஒரு வித உணர்வு மேலிட்டது. என்வாழ்நாள் முழுக்க அதுபோன்ற தொழுகையை அதற்கு முன் நான் தொழுததில்லை. அவ்வளவு இறையச்சத்துடன் கூடிய தொழுகையாக இருந்தது. இவ்வாறுதான் நம் முன்னோர்கள் தொழுகையை கற்று, அதை உள்ளச்சத்துடன் தொழுது வந்துள்ளார்கள்.

### தொழுகையில் உலக சிந்தனை:-

ஒரு மகானிடம் ஹஜ்ரத் தங்களுக்கு தொழுகையில் உலக சிந்தனைகள் ஏதேனும் வருவதுண்டா? என்று கேட்கப்பட்ட போது, தொழுகையில் அல்ல, தொழுகைக்கு வெளியேயும் எச்சிந்தனையும் வருவதில்லை என்று கூறினார்கள். உளப்பரிசுத்தத்தின் மூலமே ஒருவர் இதுபோன்ற நிலையை அடைய முடியும் என்பது

உறுதியானதாகும். நாமும் இதுபோன்று இரண்டு ரக்அத்தாவது தொழ ஆசைப்படவேண்டுமே!

தொழும்போது தக்பீர் கட்டியது முதல். ஸலாம் கொடுக்கும் வரை அல்லாஹ் அல்லாத எச்சிந்தனையுமின்றி தொழவேண்டுமே என்ற ஆசையும், அதற்கான முயற்சியும் மேற்கொள்ளவேண்டும். இதற்காக பயிற்சிபெற்ற மஷாயிகுகளின் தோழமை, அரவணைப்பு ஏதுமில்லாமல் ஆயிரம் ரக்அத் நபில்கள் தொழுதாலும் இந்நிலை வாய்க்கப்பெறாது.

என்னிடம் சில வாலிபர்கள் வந்து ஹஜ்ரத் எங்கள் நண்பர்கள் எல்லாம் சேர்ந்து ஒருமுறை நம் தொழுகையில் எந்த உலக சிந்தனையுமின்றி இரண்டு ரக்அத்தாவது தொழவேண்டுமென்று முடிவெடுத்து தக்பீர் கட்டினோம். எச்சிந்தனையும் வறக்கூடாது என்ற சிந்தனையிலேயே முழுத்தொழுகையும் தொழுது முடித்தோம் என்று கூறினர். ஆக இதுபோன்ற ஓர்மை நிலை தாமாக வராது.

நம்முடைய எதிரிகளான நப்ஸ், சைத்தானை வெற்றிக்கொண்ட பிறகே இந்நிலை உருவாக ஆரம்பிக்கும். எனவே மனஓர்மையும், இறைச்சிந்தனையும் கூடிய தொழுகை தொழ முயலவேண்டும். நமது நபி ﷺ அவர்கள் எவ்வாறு, அல்லாஹ்வை பார்ப்பதை போன்று தொழுதார்களோ அது போன்று கொஞ்சமாவது நமக்கும் தொழ வாய்ப்பு கிடைக்கவேண்டும் என்ற நோக்கில் பயிற்சி செய்ய வேண்டும்.

நபி ﷺ அவர்கள் பாங்கோசை கேட்டவுடன் ஹஜ்ரத் பிலால் رضي الله عنه அவர்களிடம் பிலாலே எனக்கு நிம்மதி ஏற்படுத்துங்கள், என் கண்களுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்துங்கள் என்று கூறுவார்கள்.

ஹஜ்ரத் ஆயிஷா ﵂ அவர்கள் நபி ﷺ அவர்கள் என்னுடன் இல்லத்தில் உரையாடிக் கொண்டிருப்பார்கள். பள்ளியின் பாங்கோசை காதில் விழுந்தவுடன் என்னை யாரென்று அறியாதவர்கள் போல் எழுந்து சென்று விடுவார்கள். சில வேளை நான் எதிரில் வந்தால் நீ யாரென்று கேட்பார்கள்? நான் சித்தீகின் மகள் என்று கூறுவேன். பிறகு சித்தீக் யாரென்று கேட்பார்கள்? உடனே பாங்கோசை கேட்டவுடன் ஏற்பட்ட இறையச்சம் அனைத்தையும் மறக்கடித்துவிட்டது என்று நான் புரிந்து கொள்வேன். நமக்கும் இது போன்ற உணர்வு ஏற்பட வேண்டுமல்லவா?

## எழுத்துக்களும், எண்ணங்களும்:-

நபி ﷺ அவர்கள் கூறிய போதனைகளை சஹாபாக்கள் கேட்டு மனனம் செய்தார்கள். அதை அடுத்த தலைமுறைக்கு போதித்தார்கள். அவ்விதமே நபியின் போதனைகள் வாழையடி வாழையாக தொகுப்புகளாலும், கல்விமான்களின் போதனைகளாலும் பாதுகாக்கப்பட்டுவருகிறது. இதை மார்க்கக் கல்வி என்று கூறப்படும்.

நபியிடமிருந்து கற்றுக்கொள்ளப்பட்ட மற்றொரு விஷயம் தான் நபியவர்களின் உணர்வுகளாகும். இதை சஹாபாக்கள் நபியின் தோழமை மூலமே உணர்ந்தார்கள். இது ஒரு உள்ளிதிலிருந்து பிற உள்ளத்திற்கு இடம் பெயர்வதாகும். இவற்றை ஏட்டில் எழுத முடியாது. இது போன்ற உணர்வுகளும் நபி ﷺ அவர்களிடமிருந்தே கற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதற்கு யாரேனும் ஆதாரம் கேட்டால் அவருக்கு ஹன்ளலா ﵁ அவர்களின் ஹதீஸைக் கூறலாம்.

## ஈமானில் கூடுதல் எவ்வாறு?

ஒரு சந்தர்ப்பத்தில் ஹஜ்ரத் ஹன்ளலா ﵁ அவர்கள் தனக்கு நபியின் அருகில் அமர்ந்திருந்தால் தன் உள்ளத்தில் என்ன மனோநிலை ஏற்படுகிறதோ அது தன் இல்லத்தில் இருந்தால் ஏன் ஏற்படுவதில்லை? என்று யோசிதுக்கொண்டிருந்தார்கள். பிறகு தன்னைத் தானே குறைக் கூறியவர்களாக, ஹன்ளலா முனாபிக் (இரட்டைவேடம் தறிப்பவன்) ஆகிவிட்டான். ஹன்ளலா முனாபிக் ஆகிவிட்டான் என்று கூறிக்கொண்டே வீட்டிலிருந்து நபி ﷺ அவர்களின் சபையை நோக்கி ஓட ஆரம்பித்துவிட்டார்கள்.

செல்லும் வழியில் ஹஜ்ரத் அபூபக்ர் ﵁ அவர்கள் குறுக்கிட்டு சுப்ஹானல்லாஹ் என்ன கூறுகிறீர்? உமக்கு என்ன நேர்ந்தது? எங்கு செல்கிறீர்? என்று கேட்டபோது, ஹன்ளலா நயவஞ்சகனாகிவிட்டான் என்று கூறினார்கள். அதாவது நபியின் சபையில் இருக்கும் போது ஏற்படும் சொர்க்க நரக சிந்தனை வீட்டில் இருக்கும் போது ஏற்படுவதில்லை. இது நயவஞ்சகத்தனத்தின் அடையாளமல்லவா? அங்கொன்று. இங்கொன்றுமாக இருத்தல் சரியல்லவே என்றார்கள்.

இதைக் கேட்ட அபூபக்ர் சித்தீக் ﵁ அவர்கள் தோழரே எனக்கும் இதே நிலைதானே உள்ளது என்று கூறினார்கள். வாருங்கள் நானும் உம்முடன் வருகிறேன் என்று இருவரும் நபி ﷺ அவர்களின் சபையை நோக்கிச் சென்றார்கள். இருவரின் முறையீட்டைக் கேட்ட நபி ﷺ அவர்கள் தோழர்களே! என் சபையில் உள்ள போது ஏற்படும் மனோநிலை எல்லாசந்தர்ப்பத்தில் இருந்தால் மலக்குகள் நீங்கள் நடமாடும் பாதையிலும், உங்களின்

படுக்கை, விரிப்புகளிலும் உங்களை முஸாபாகா செய்ய ஆரம்பித்துவிடுவார்கள்.

ஆனால் இந்நிலை எந்நேரமும் வாய்க்கப்பெறுவது அரிதானது. அவ்வப்போது மனோநிலை மாறிக்கொண்டு தான் இருக்கும். அவ்வாறு இருப்பது நயவஞ்சகர்களின் நிலை அல்ல என்று ஆறுதல் கூறினார்கள். இவ்விடத்தில் கேட்பவர்களுக்கு ஒரு சந்தேகம் ஏற்படக்கூடும். வீட்டில் இருக்கும் போது ஈமான் குறைவதும், நபியின் அருகில் உள்ள போது ஈமான் கூடுவதும் எவ்வாறு? இங்கு ஈமானில் கூடுதல் சார்ந்த எந்த கட்டளையும் புதிதாக ஒன்றும் இறக்கப்படவில்லையே! பிறகு ஈமானில் கூடுதல் என்றால் எப்படி?

உண்மையில் இங்கு ஈமானில் கூடுதல் என்பது எண்ணிக்கை அளவில் அல்ல. மாறாக தரம் அளவில் கூடுதலைக் குறிப்பதாகும். இதற்கு பொருத்தமான உதாரணமாக, கடல் நீரைக் குறிப்பிடலாம். கடலில் சில நேரம் அலைகள் குறைந்து அமைதி நிலவும். சில நேரங்களில் அலைகள் அதிகமாகி ஆற்பரித்தெழும். குறிப்பாக சில நாட்களில் கடலின் மேல் மட்டம் அலைகளின்றி உள்வாங்கல், வெளிப்படல் எதுவுமின்றி அமைதியாக காட்சியளிக்கும்.

வேறு சில நாட்களில் அதாவது பௌர்ணமி நாளின் போது கடல் அதிக அலைகள் கொண்டதாகத் தென்படும். இதற்கு கடலில் ஒரு வகையான அழுத்தநிலை உருவாவதுதான் காரணமாகும். இச்சந்தர்ப்பத்தில் கடல் தண்ணீரில் கூடுதல் ஏதும் ஏற்படவில்லை. மாறாக அதன் தண்ணீரின் உள் அழுத்தத்தினால் அலைகள் ஆற்பறித்தெழுகிறது. மேலும் உள்வாங்கல், வெளிப்படல் போன்றவையும் ஏற்படுகின்றது.

இவ்வாறே சஹாபாக்களின் ஈமானிய நிலையும் அவர்கள் தத்தமது இல்லங்களில் இருக்கும் போது சலனமின்றி அமைதியான நிலையில் இருக்கும். ஆனால் நபி ﷺ என்ற பௌர்ணமிக்கு சமீபத்தில் இருக்கும் போது ஒரு விதமான ஈமானிய உள் அழுத்த நிலை உருவாகி, அமல்கள் என்ற அலைகள் ஆற்பரித்தெழுந்து சொர்க்க நரகமும் கண்ணிற்கு அருகில் இருக்கும் காட்சியாகத் தென்படும்.

இவ்வாறே எவராவது நல்லடியார்களின் தோழமையில், அரவணைப்பில் தன் நேரத்தை கழித்தால் அவரது ஈமானில் உயிரோட்டம் ஏற்பட்டு, நல்ல அமல்கள் என்ற அலை ஆற்பரித்து எழும். ஆக நபியின் போதனைகளுக்கு ஷரீஅத்தின் கல்வி என்பதாகவும், நபியின் மனோ உணர்வுகளுக்கு தஸவ்வுஃப் என்பதாகவும் அழைக்கப்படும் என்பதை தெளிவாக அறிந்து கொண்டோம். ஷரீஅத்தின் ஞானத்தை கற்பவர்கள் உலமாக்கள் என்றும், தரீக்கத்தின் உள்ளுணர்வுகளை திரட்டிய ஞானிகளுக்கு மஷாயிகுகள் என்றும் அழைக்கப்படும்.

## நிறவியாபாரியும், நிறமேற்றுபவர்களும் வெவ்வேறானவர்கள்.

குர்ஆன், ஹதீஸில் ஆய்வுசெய்து சட்டங்களை வகுத்துத்தருகின்ற மேதைகளுக்கு ஃபிக்ஹூடைய இமாம்கள் என்று கூறப்படும். அவர்களை மக்கள் தங்களின் இமாம்களாக, ஏற்று இன்றுவரை பின்பற்றி வருகின்றனர். ஏன், ஹதீஸில் தேர்ச்சிபெற்றிருந்த பல மகான்களும் கூட ஃபிக்ஹூடைய இமாம்களை பின்பற்றக்கூடியவர்களாகவே இருந்துள்ளனர்.

அவ்வாறே குர்ஆன், ஹதீஸில் ஆய்வுசெய்து உளநோய்களுக்கான மருந்துகளை அறிவித்து

தந்தவர்களையும் இமாம்கள், மஷாயிகுகள் என்று அழைக்கப்படும். இவர்களையும் மக்கள் இன்றுவரைப் பின்பற்றி வருகின்றனர்.

குர்ஆன், ஹதீஸ் என்பன நிறங்களாகும். உலமாக்கள் நிற வியாபாரிகளாவார்கள். யார் தம்மை தேடி வந்தாலும் குர்ஆன், ஹதீஸின் கருத்துக்களை தெளிவாக விளக்கி தங்களிடம் உள்ள நிறங்களை விநியோகம் செய்கின்றனர். நிற விற்பனையாளர், நிறம் ஏற்றுபவர் இருவரும் வெவ்வேறானவர்களாவர்.

கடைவீதியில் பல்வேறு வகையான நிறங்களின் கடைகள் இருக்கும். நாம் எந்த துணிக்கு என்ன நிறத்தை விரும்புகிறோமா அவற்றை வாங்கிக்கொள்ளலாம். ஆனால் அத்துணிக்கு அக்குறிப்பிட்ட நிறத்தை நிறமேற்றித் தருபவர்கள் வேறொருவராக இருப்பார்கள். இவ்வாறே குர்ஆன், ஹதீஸ் என்பவை நிறங்களாகும். உலமாக்கள் நிற வியாபாரிகளாவார்கள். மஷாயிகுகள் நிறமேற்றுபவர்களாவர்கள்.

யார் இவர்களின் தோழமையைத் தோந்தெடுக்கிறாரோ அவருக்கு அல்லாஹ்வின் நிறம் என்று அழைக்கப்படக்கூடிய தீனின் மீதுள்ள பற்றை ஆடைக்குச் சாயமேற்றுவதை போன்று உள்ளத்தில் பதியவைப்பார்கள்.

صُبْغَةَ اللّٰهِ وَ مَنْ اَحْسَنُ مِنَ اللّٰهِ صِبْغَةَ لقوم يؤمنون

அல்லாஹ்வின் நிறம், அவனின் நிறத்தை விட அழகிய முறையில் வர்ணம் ஏற்றுபவர் யார் உள்ளனர்? என்பதாக அல்லாஹ்வே கேட்கின்றான்.

ஃபிக்ஹ் சட்டங்களில் இமாம்களையும், தஸவ்வுஃபுடைய படித்தரங்களைக் கடப்பதற்கு மஷாயிகுகளின் அரவணைப்

பிலும் இருக்க நமக்கு குர்ஆன் உத்தரவிட்டுள்ளது. இதன்படி உலமாக்கள் மற்றும் மஷாயிகுகள் ஆகிய இரு சாரார்களுடனும் இருக்க வேண்டும்.

உலமாக்களின் சபையில் அமர்ந்து மார்க்கக்கல்வியையும், மஷாயிகுகளின் தோழமையில் உள்ளத்தைத் தூய்மையாக்கும் ஞானத்தையும் கற்க குர்ஆனில் வழிகாட்டப் பட்டுள்ளது.

فَاسْأَلُوْا أَهْلَ الذِّكْرِ إِنْ كُنْتُمْ لَا تَعْلَمُوْنَ

அறியாத விஷயத்தை ஞானமுள்ளவர்களிடம் கேளுங்கள் என்று ஏவல் வாக்கியத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வசனத்தில் அஹ்லுத்திகர் என்ற வார்த்தைக்கு மார்க்க ஞானமுள்ளவர்கள் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது. ஆக உலமாக்களிடமிருந்து மார்க்க ஞானங்களை கற்றுக்கொள்ள இந்த வசனத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

يَاَيُّهَا الَّذِيْنَ اَمَنُوا اتَّقُوْا اللّٰهَ وَ كَانُوا مَعَ الصَّادِقِيْنَ

அவ்வாறே ஈமான் கொண்டோர்களே அல்லாஹ்வை அஞ்சிக்கொள்ளுங்கள். மேலும் உண்மையாளர்களுடன் சேர்ந்திருங்கள் என்று இவ்வசனத்திலும் ஏவல் வாக்கியத்தில் தான் கூறப்பட்டுள்ளது. எனவே மார்க்க அறிவை மத்ரஸாவிலும், உளப்பரிசுத்தத்தின் முறையை கான்காஹ்விலும் பெற முயலுங்கள் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சிலசந்தர்ப்பத்தில் அல்லாஹ் தன் வல்லமையால் இவ்விரு ஞானங்களையும் ஒருசேர உள்ளடக்கிய மகான்களையும் பிறக்கச் செய்துள்ளான். அவர்கள் இரு கடல்களின் சங்கமம் போன்று திகழ்பவர்களாக இருந்தனர்.

நம் முன்னோர்களில் எத்தனையோ அறிஞர்கள் இவ்விரு துறைகளிலும் முதிர்ந்த அனுபவம் பெற்றவர்களாக இருந்துள்ளனர்.

காசிம் நானுத்வீ ﵀, ரஷீத் அஹ்மது கங்கோஹி ﵀, ஷேகுல் ஹிந்து மஹ்முதுல் ஹஸன்(தேவ்பந்தி)﵀, ஹுஸைன் அஹ்மது மதனி ﵀ போன்ற அனைவரும் மார்க்ககல்வியில் மலை போன்ற உறுதி பெற்றிருந்தது போல் தஸவ்வுஃப்பிலும் முன்னோடிகளாகத் திகழ்ந்துள்ளனர்.

எனவே நாம் உலமாக்களின் அரவணைப்பில் இருப்பதற்கு ஏவப்பட்டிருப்பது போல் மஷாயிகுகளின் அரவணைப்பிலும் இருக்க ஏவப்பட்டுள்ளோம். ஆக இரண்டுவிதமான கல்வியும் அவசியமானதாகும். மார்க்கக்கல்வி (புறக்கல்வி) கற்பிக்கும் இடத்திற்கு மதரஸா என்றும், ஆன்மீகப் பயிற்சி (அகக் கல்வி) போதிக்கும் இடத்திற்கு கான்காஹ் என்றும் கூறப்படுகிறது.

## ஏங்கும் நான்கு, எதிலும் நான்கு:-

அல்லாஹ் இவ்வுலக மக்களுக்கு வழிக்காட்ட வான்வேதங்களின் வரிசையில் தவ்ராத், ஜபூர், இன்ஜீல், குர்ஆன் ஆகிய நான்கு முக்கிய வேதங்களை இறக்கினான். அவ்வாறே நபிக்கு பிறகு வந்த கலீபாக்களும் அபு பக்ர் ﵁, உமர் ﵁, உஸ்மான் ﵁, அலி ﵁, ஆகிய நால்வராகவே இருந்தனர். இவர்களுக்கே நேர்வழி பெற்ற அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கலீபாக்கள் என்றழைக்கப்படும்.

மார்க்கக்கல்விலும், ஷரீஅத்துடைய ஞானங்களிலும் தேர்ச்சி பெற்ற, பின்பற்றத் தகுதியான எத்தனையோ இமாம்கள் வாழ்ந்து மறைத்திருந்தாலும் ஒட்டுமொத்த சமுகத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட பின்பற்றப்பட்ட

இமாம்களும் நால்வராகவே இருந்தனர். இமாம் அபு ஹனீஃபா ﵀. இமாம் ஷாபீயி ﵀, இமாம் மாலிக் ﵀, இமாம் அஹ்மது ﵀, ஆகியோர்களே அனைவராலும் பின்பற்றப்பட்ட இமாம்களாவர்.

இல்லையெனில் அவ்ஜாயி (ரஹ்), சுப்யான் ஸவ்ரி ﵀, ஹம்மாத் ﵀, போன்ற அறிஞர்களையும் அவர்கள் கால மக்கள் இமாம்களாக ஏற்று பின்பற்றிவந்தனர். ஆனால் இந்த இமாம்கள் ஒட்டுமொத்த சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையை அடையவில்லை! ஏன் இந்த நான்கு இமாம்களை மட்டும் பின்பற்ற வேண்டும், வேறு யாரையும் பின்பற்றக் கூடாதா என்று கேட்டால், ஒரு தந்தைக்கு மொத்தம் பன்னிரண்டு பிள்ளைகள் என்று வைத்துக்கொள்வோம்.

அவர்களில் ஒவ்வொருவராக இறந்து தந்தை மரணிக்கும் சமயம் நான்கு நபர்கள் மட்டும் எஞ்சியுள்ளதாக வைத்தால், தந்தையின் சொத்து பிறந்த பன்னிரண்டு குழந்தைகளுக்கு மத்தியில் பங்கிடப்படுமா அல்லது உயிரோடுள்ள நான்கு நபர்களுக்கு மட்டுமா? என்றால் நான்கு நபர்களுக்கு மட்டுமே பங்கிடப்படும் என்போம். ஏன் இவர்கள் மட்டுமா அவரின் பிள்ளைகள்? ஏன் மற்றவர்களுக்கு கிடைக்காதா? என்றால் இது அல்லாஹுவின் முடிவு என்று பதில் கூறுவோம். அவ்வாறே இந்த நான்கு இமாம்களை மட்டும் மக்கள் பின்பற்றி வருவது அல்லாஹுவின் முடிவாகும்.

இதே போன்று ஆன்மீகத்துறையிலும், ஆன்மீக ஞானத்திலும் நான்கு மகான்கள் பின்பற்றப்படத் தகுதியான உயர்நிலை அடைந்திருந்தார்கள். ஷேக் அப்துல் காதிர் ஜீலானி ﵀, ஷேக் ஷிஹபுத்தீன் சுஹ்ரவர்தி ﵀. ஷேக் பஹாவுத்தீன் நக்ஷபந்தி ﵀. ஷேக் காஜா முயீனுத்தீன்

சிஷ்தி ﵀ ஆகிய நான்கு மகான்கள் நான்கு ஆன்மீக வழித்தொடரில் பிரபல்யமானவர்களாக உள்ளனர்.

## அக,புற அறிவு ஞானம் பெறுவோம்:-

اُطْلُبُوْا الْعِلْمَ

மார்க்க ஞானத்தை தேடுங்கள் என்று நபி ﷺ அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

اَلْعِلْمُ مَنَ الْمَهْدِ اِلَي اللَّحْدِ

கல்வி ஞானத்தைத் தேடுதல் தொட்டில் முதல் கப்ரு வரையும்,

طَلَبُ الْعِلْمِ فَرِيْضَةٌ بَعْدَ الْفَرِيْضَةِ

கடமைகளுக்குப் பிறகு உள்ள ஒரு முக்கிய கடமை மார்க்கக்கல்வியைத் தேடுதல் என்பதாகவெல்லாம் ஹதீஸ்களில் வந்துள்ளதால் மார்க்கக்கல்வி கற்க வேண்டிய அவசியத்தை நாம் நன்கு உணர்ந்துள்ளோம். எனவே ஷரீஅத்தின் கல்வி என்றால் என்னவென்று அனைவரும் அறிந்துள்ளோம்.

ஆனால் அகக்கல்வியான இஹ்சான் பற்றிய கல்வி எங்கிருந்து வந்தது என்றும், இதற்கு என்ன ஆதாரமுள்ளது என்று பலரும் கேட்கலாம். புஹாரியில் வந்துள்ள உமர் ﵁ அவர்களால் அறிவிக்கப்பட்ட ஹதீஸே ஜிப்ரயீல் இதற்கு சிறந்த சான்றாகும்.

நாங்கள் ஒரு நாள் பகல்வேளையில் நபி ﷺ அவர்களுடன் அமர்ந்திருந்த போது வெளை நிற ஆடை அணிந்த, புழுதிகளற்ற பளபளப்பான கருமையான முடியுடன்

ஒருவர் வந்தார். தூரப் பயணத்தின் எக்களைப்புமின்றி, சுறுசுறுப்பாகத் தென்பட்டார். எங்களில் எவரும் அறிந்த உள்ளூர்காரராகவும் தெரியவில்லை.

அவர் நபி ﷺ அவர்களின் அருகில் வந்து நபி ﷺ அவர்களுடைய முட்டியுடன் தன் முட்டியை இணைத்தவாறு அமர்ந்தார். பிறகு இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் போன்றவைகள் என்னவென்று வினவினார். அவர் இதுபோன்ற கேள்விகள் கேட்டுவிட்டுச் சென்ற பிறகு உங்களுக்கு தீனைக் கற்றுக்கொடுக்கும் நோக்கில் ஹஜ்ரத் ஜிப்ரயீல் عليه السلام, தான் வந்துசென்றார்கள் என்று நபி ﷺ கூறினார்கள்.

ஆக இந்த இஹ்ஸானும் தீனில் உள்ள ஒன்றாகும். இதை மறுப்பவர்கள் எந்தளவு தீனை அறிந்துள்ளார்கள், அவர்களின் மார்க்க அறிவு எத்தரத்தில் உள்ளது என்பதை உணர்ந்துகொள்ளலாம். இத்துறை மார்க்கத்திற்கு அப்பாற்பட்ட பித்அத் அல்ல, இதுவும் தீனில் உள்ளது என்பதை மிக அழகாக ஜிப்ரயீல் عليه السلام அவர்கள் உணர்த்தியுள்ளார்கள். இந்த ஹதீஸில் வந்துள்ள மூன்று கேள்விகளைப் பற்றி சற்று விரிவாகக் காண்போம்.

## புரிந்தவர் பாதுகாப்பார், புரியாதவர் பறிகொடுப்பார்:

முதலாவது இஸ்லாம் சம்பந்தமாகவும், பிறகு ஈமான், இஹ்ஸான் சம்பந்தமாகவும் கேட்டுள்ளார்கள். இஸ்லாம் என்பது உடல் உறுப்புகளினால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளாகும். ஈமான் என்பது உள்ளம் சார்ந்த நம்பிக்கையாகும். இஹ்ஸான் பற்றிய விஷயங்கள் புரிதல் சார்ந்தவையாகும். ஒரு மனிதனின் நம்பிக்கை புரியாத அடிப்படையில் இருந்தால் அது குறையுடையதாகவே

இருக்கும். சரியான புரிதலுடன் கூடிய நம்பிக்கையே வலுவானதாக இருக்கும்.

உதாரணமாக ஒரு விவாதத்தில் ஈடுபடுகிற நபரிடத்தில் விவாதத்தின்போது எதிர் தரப்பில் உள்ளவர் ஒரு பேச்சிற்காக சிறிது நேரம் நான் முஸ்லிமாக, நீ இறை மறுப்பாளனாக வைத்துக்கொள்வோம் என்று கூற, இவரும் அதை சரி என ஆமோதித்தால் இவர் உண்மையிலேயே காஃபிராகிவிடுவார் என்று உலமாக்கள் எழுதியுள்ளனர்.

அந்த நபரிடம் ஈமான் இருந்தது. ஆனால் அதில் ஆழமான புரிதல் இல்லை. புரியாத அடிப்படையில் நம்பிக்கைகொள்ளப்பட்டால் அது நிலைத்திருக்காது. மிக விரைவில் தொலைந்துவிடும். நமது வாழ்வில் நாம் ஒரு வினாடி கூட ஈமான் அற்றவர்கள் என்று கூற இயலாது. ஏன் அவ்வாறு யூகிக்கவும் முடியாது. எவ்வாறு உடலிலிருந்து ஆடை ஒரு வினாடி விலகினாலும் நிர்வாணநிலையோ, அவ்வாறே ஈமான் ஒரு வினாடி உள்ளத்தை விட்டு விலகினாலும் தீனை விட்டு விலகிவிடும் பரிதாப நிலை ஏற்படும்.

அவரிடத்தில் இருந்த ஈமானில் புரிதல் இல்லாத காரணத்தினால் கொஞ்ச நேரத்திற்கு நான் என்னை காஃபிராக எண்ணிக்கொள்கிறேன் என்று கூறி நிஜத்திலும் காஃபிராகிவிட்டார். எனவே இஹ்ஸான் என்பது சரியான புரிதலுக்கு கூறப்படும். ஒரு பொருளின் மதிப்பை புரியாதவர் அதை எவ்வாறு பாதுகாப்பார். எனவே ஈமானில் புரிதலற்றவர் எவ்வாறு ஈமானை பாதுகாக்க முடியும்?

ஷேக் ஸஃதி ﵀ கூறுகிறார்கள். ஒரு சிறு பிள்ளைக்கு அதனுடைய தாய் தங்க மோதிரம் அணிவித்தாள். ஒரு நாள் தெருவில் அவன் விளையாடிகொண்டிருந்தபோது

தெரு வழியாக வெள்ளம் விற்றுக்கொண்டு ஒருவர் வந்தார். தெருவில் விளையாடிக்கொண்டிருந்த அனைத்து பிள்ளைகளும் வெள்ளதை வாங்கி சுவைத்துக் கொண்டிருந்தனர். அச்சிறுவனும் அவன் அருகில் சென்று நின்று கொண்டான். அவன் ஒரு வெள்ளக்கட்டியை சுவைக்க கொடுத்து எவ்வாறு உள்ளது? என்று கேட்டான்.

அவன் இனிப்பாக உள்ளது என்றான். சரி உன் விரலை சற்று சூப்பிப்பார்? அது இனிக்கிறதா? என்று கேட்ட போது தங்கமோதிரம் அணிந்திருந்த விரலை அவன் சூப்பிவிட்டு எந்த ருசியும் இல்லை என்றான். அதற்கு அவன் ருசியுள்ளதை வைத்துக்கொண்டு, ருசியற்றதை என்னிடம் கொடுத்துவிடு என்றான். அதற்கு அவன் வெளக்கட்டியை வாங்கிக்கொண்டு தங்கமோதிரத்தை கழற்றி அவனிடம் கொடுத்துவிட்டான் .

இவ்வாறு ஒரு பொருளின் மதிப்பு தெரியாதவர் அதை கட்டாயம் இழந்துவிடுவார். ஆக புரியாத அடிப்படையில் ஈமான் கொள்பவரின் நிலையும் இவ்வாறே பரிதாபமானதாகி விடும். எனவே தான் இந்த இஹ்ஸான் ஒரு மனிதனின் ஈமானைப் பாதுகாக்கும் கேடயம் என்று கூறலாம். யாருக்கு இஹ்ஸானுடைய நிலை வாய்க்கப்பெற்றதோ அவர் எத்தருணத்திலும் ஈமானை இழக்கமாட்டார்.

## இறக்கும் தருவாயில் தான் ஈமானுக்கு அதிக ஆபத்துள்ளது:-

ஒருவனுடைய ஈமானுக்கு மிக அதிக ஆபத்து அவனுடைய மரண நேரத்திலே ஏற்படும். எத்தனையோ நபர்களை இறுதி நேரத்தில் சைத்தான் மிக தந்திரமாக ஈமானை இழந்த துர்பாக்கியவான்களாக மரணிக்க வைத்துள்ளான். இது போன்ற இக்கட்டான நேரத்தில்

ஈமானுடன் இஹ்ஸானின் தரத்தை அடைந்தவரே தப்பிக்க இயலும். இந்நேரத்தில் ஈமான் சார்ந்த நம்முடைய அறிவார்ந்த ஆதாரங்கள் எதுவும் பலனளிக்காது.

இமாம் ராஜிஃ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இறைவன் இருக்கிறான் என்பதற்கு தர்க்க ரீதியாக தன்னிடம் 100 ஆதாரங்கள் வைத்திருந்தார்கள். அவர்களின் மரண நேரத்தில் சைத்தான் அவர்களிடம் வந்து ராஜீ! அல்லாஹ் என்பவனே கிடையாது என்றான். அதற்கு இமாமவர்கள் இறைவன் இருக்கிறான் என்றார்கள். சரி அதற்கு என்ன ஆதாரம் என்று கேட்டான்.

இதோ முதலாவது ஆதாரம் என்று ஒரு ஆதாரத்தை இமாமவர்கள் கூறியபோது அதற்கு சைத்தான் விளக்கமளித்துவிட்டான். அவர்கள் மறுபடியும் இரண்டாவது, மூன்றாவது ஆதாரத்தை முன்வைத்த போது அதற்கும் விளக்கமளித்தான். இவ்வாறாக நூறு ஆதாரங்களையும் கூறி முடிக்க அவை அனைத்திற்கும் விளக்கமளித்துவிட்டான்.

இறுதியாக இமாம் ராஜீ ﵀ அவர்கள் வருத்தத்தில் ஆழ்ந்துவிட்டார்கள். அச்சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அவர்களின் ஆன்மீக குருவின் (ஷேகின்) தோற்றத்தை அல்லாஹ் காட்டினான். அம்மகான் கோபத்துடன் ஓ ராஜீயே! என் அல்லாஹ்வை எவ்வித ஆதாரமுமின்றியே நான் நம்பக்கூடியவன் என்று அந்த மூதேவியிடம் கூறுவீராக என்று அதட்டினார்கள். இவ்விதமே இமாம் ராஜீ ﵀ போன்றவர்களும் இறுதி நேரத்தில் சோதிக்கப்பட்டுள்ளார்கள்.

அல்லாஹ்வின் விஷேச அருளால், இந்த இஹ்ஸானின் பலனாக அபாயத்திருந்து பாதுகாக்கப்பட்டுவிட்டார்கள். ஆக

மரண நேரத்தில் சைத்தானின் தாக்குதல் மிக கடுமையாக இருக்கும். அச்சந்தர்ப்பத்தில் எவரிடம் ஈமானும், இஹ்ஸானும் இருக்குமோ அவரே முஃமினாக மரணிப்பார். நம்முடைய முன்னோர்களில் பலர் சிரித்த வண்ணம் இறப்பெய்தியதும் சைத்தானை விட்டு அல்லாஹ் அவர்களை பாதுகாத்ததினால் தான்.

ஏனெனில் தன் நேசர்களுக்கருகில் திருடர்கள், கொள்ளைக்காரார்கள் நெருங்க யார் தான் அனுமதிப்பார். ஆக ஈமான் என்பது ஒரு வினாடி கூட நாம் தேவையற்றிருக்க முடியாத மிகப்பெரும் சொத்தாகும். அதற்குண்டான பாதுகாப்பு இத்துறையில் தான் உள்ளது. இதன் மூலம் இத்துறையின் முக்கியத்துவத்தை மறுக்க இயலாது.. ஆக நாம் தரீகத், இஹ்ஸான் என்று கூறக் கூடியவிஷயம் உண்மையில் ஷரீஅத்துடைய மெய்க்காப்பாளனும், உதவியாளனும் ஆகும். இது ஷரீஅத்தை விட்டும் தனித்த ஒன்றல்ல.

அது மட்டுமல்ல இஹ்ஸான் இருந்தால் தொழுகைப் பாதுகாப்பும் ஏற்படும். மேலும் சகல பாவங்களிலிருந்தும் பாதுகாப்பும் கிடைக்கும். ஆக ஷரீஅத் தான் அடிப்படை நோக்கமாகும். இஹ்ஸான் (தரீகத்) என்பது அதன் பாதுகாப்பாளரும், பணிவிடையாளருமாகும். குறிப்பாக மரணிக்கும்போது ஈமானை பாதுகாத்தவாறு மரணிப்பது இறைவனின் தனிப்பட்ட கிருபையாகும்.

## முகஸ்துதியற்ற வணக்கத்தை விட ஒரு நிமிட தோழமை மேலானது!

ஒரு முறை அண்டை நாட்டுடைய தலைமை முஃப்தியாக இருந்த மௌலானா முஃப்தி ஷஃபீ ﵀ அவர்கள் ஹஜ்ரத்

தானவீ ﷺ அவர்களை சந்திக்க தானாபவன் வந்தார்கள். ஹஜ்ரத் தானவியிடம், முஃப்தி சாஹிப் அவர்கள், ஹஜ்ரத் பொதுவாக கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் ஒரு விஷயத்தை அதிகம் மிகைப்படுத்தியோ அல்லது அதிகம் தாழ்த்தியோ தான் கூறுகிறார்கள்.

தாங்கள் விரும்பும் ஒன்றை மிகைப்படுத்தியோ, விரும்பாததை தரம் தாழ்த்தியோ கூறுவது பொதுவாக மனித சுபாவம் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை. எனினும் இவர்கள் இன்னும் இதில் சற்று வரம்பு மீறியே செயல்படுகிறார்கள் என்று கூறினார்கள். அதற்கு தானவீ ﷺ அவர்கள், இதன் மூலம் உமது நோக்கமென்ன என்று கேட்க, அதற்கு ஹஜ்ரத் ஷஃபீ ﷺ அவர்கள் மௌலானா ரூமீ ﷺ அவர்களின் “ஒரு நிமிட நல்லோர்களின் தோழமை நூறு வருட முகஸ்துதியற்ற வணக்கத்தை விட மேலானது” என்ற ஒரு கவிதையை தன் கூற்றிற்கு ஆதாரமாக கூறினார்கள்.

எனக்கு இக்கவிதையில் கூடுதல் மிகைப்படுத்தல் உள்ளதாகத் தெரிகிறது. ஏனெனில் ஒரு நிமிட நல்லோர்களின் தோழமை 100 ஆண்டுகளுடைய வணக்கத்தை விட சிறந்தது என்பதே வியப்பாக உள்ள போது முகஸ்துதியற்ற வணக்கம் என்றால் இன்னும் அதிக வியப்பாக உள்ளதே! இவையனைத்தையும் நிதானமாக கேட்ட ஹஜ்ரத் தானவீ ﷺ அவர்கள் சரி இதே கவிதையை நான் என் புரிதலின் படி படிக்கவா என்று கேட்டுவிட்டு, ஒரு நிமிட நல்லோர்களின் தோழமை ஒரு இலட்சம் வருட முகஸ்துதியற்ற வணக்கங்களை விட மேலானது என்பதாகப் படித்தார்கள்.

நூறு வருடங்கள் என்பதே புரியாத போது ஒரு இலட்ச வருடங்கள் என்பதை என்னால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள இயலும். அதற்குப் பிறகு ஹஜ்ரத் தானவீ ﵀ அவர்கள் இதன் கருத்தைப் புரிய வைத்தார்கள். என்ன ஒருவர் இலட்ச வருடங்கள் வணக்கங்கள் செய்தாலும் இறுதியில் ஈமானுடன் மரணிப்பார் என்ற உத்தரவாதம் உள்ளதா? என்று கேட்டார்கள். எவர் தான் இதை உறுதியாக கூற முடியும்.

மரண நேரத்தில் என்ன நிகழும் என்பது எவருக்குத்தான் தெரியும்? சைத்தான் எவ்வளவு ஆண்டுகள் வணங்கினான். பூமியின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஸஜ்தா செய்தான். ஆனால் இறுதியில் பாக்கியமற்றவனாக, இறை அருளை விட்டு தூரமாக்கப்பட்டானல்லவா ஆகிவிட்டான்.

பல்ஆம் பின் பாஊரா ஏறத்தாழ 300 ஆண்டுகள் வணக்கங்கள் செய்திருந்தும் இறுதி நேரத்தில் என்ன ஆனது? அவருடைய வணக்கங்கள் அனைத்தும் பயனற்றதாக அல்லவா ஆகிவிட்டது.

ஆக இலட்சம் வருடங்கள் வணக்கங்கள் செய்தாலும் ஈமானுடன் இறப்போமா என்று உறுதியாக கூற முடியாது. இவ்வளவு நீண்ட கால வணக்கத்திற்குப் பிறகும் அபாயம் நீங்கவில்லை அல்லவா! ஆனால் இறை நேசர்களுடனான ஒரு நிமிட தோழமையின் தாக்கத்தைப்பற்றி நபியே ஹதீஸில்

هُمْ قَوْمٌ لَا يُشْقِي جَلِيْسُهُمْ

“அவர்களுடன் (சில வினாடி) அமர்பவர்களும் துர்பாக்கியமடையமாட்டார்கள்” என்று சான்று பகன்றுள்ளார்கள்.

மரண நேரத்தில் ஈமானில்லாமல் மரணிக்கும் துரதிஷ்ட நிலையை விட்டும் இவர்கள் பாதுகாக்கப்படுவார்கள் என்று தெளிவுபடுத்தியுள்ளார்கள். ஈமானின்றி மரணிப்பவரைவிட வேறு யார் துரதிடசாலியாக இருக்கமுடியும்? இலட்ச வருட வணக்கத்தில் கூட கிடைக்காத இந்த பாக்கியம் நல்லோர்களுடன் உடனிருத்தலின் மூலம் கிடைக்கின்றதென்றால் இத்தோழமை எவ்வளவு முக்கியமானது என்பதை அறியலாம்.

**எண்ணங்களைக் கற்பிக்கும் துறை எவ்வாறு பித்அத்தாகும்:-**

இஹ்ஸானுடைய துறையை புதுமையானது (பித்அத்) என்று ஒதுக்கி, இதற்கு மார்க்கத்தில் என்ன ஆதாரம் உள்ளது என்று கேட்கிறவர்களுக்கு நாம்

اِنَّمَا الْاَعْمَالُ بِالنِّيَّاتِ

“எண்ணங்களைக் கொண்டே செயல்கள் அமைகின்றன” என்ற புகாரி ஷரீஃபின் முதல் ஹதீஸைக் கூறி விளக்கமளிப்போம். அதாவது, இந்த எண்ணத்தைத் தூய்மைப் படுத்தும் கலைக்கே தஸவ்வுஃப் என்று கூறப்படும்.

ஒருவர் தன் அனைத்து செயல்பாடுகளையும் இறைத்திருப்தியை முன் வைத்து செயல்படக்கூடியவனாக ஆகுவதே தஸவ்வுஃபின் நோக்கமாகும். நம்முடைய முன்னோர்கள் எட்டு, பத்து வருடங்கள் தங்களின் ஆன்மீக ஆசான்களின் பணிவிடையிலிருந்துதான் எண்ணத்தைக் கற்றுக்கொண்டார்கள். இவ்வளவு முயற்சிக்குப் பிறகே எண்ணம் பண்பட்டதென்றால். அதை அவ்வளவு இலேசாக கற்றுக்கொள்ளலாம் என்று எண்ணிவிட்டீர்களா?

இந்தியாவிற்கு இஸ்லாம் மஷாயிகுகளின் முயற்சியால் தான் வந்தது. பிறகு உலமாக்களின் மூலம் அல்லாஹ் இந்த தீனை இங்கு பிரகாசிக்கச் செய்தான். எனவே நாம் மஷாயிகுகள், மற்றும் உலமாக்கள் ஆகிய இரு சாரார்களையும் சமமாக மதிக்கக்கூடியவர்களாவோம். ஆக அனைத்து ஆன்மீக தொடர்களின் (ஸில்ஸிலா நோக்கமும் ஒன்றே. எவ்வாறு மலை உச்சியிலுள்ள மாளிகையை பல வழிகளில் சென்றடையலாமோ, வழிகள் வேறுபட்டாலும் சேரும் இடம் ஒன்றோ! அவ்வாறே ஆன்மீக தொடர்களின் வழிகளும் வெவ்வேறாக இருந்தாலும் நோக்கம் ஒன்று தான்.

நீ சிஷ்தி. காதிரி, நக்ஷபந்தி, சுஹ்ரவர்தி ஆக எந்த வழிமுறைகளில் பயிற்சி செய்தாலும் உள்ளத்தில் இறைச் சிந்தனையின் தொடர்நிலை ஏற்படுவதே நோக்கமாகும். உன் உள்ளத்தில் இறை தியானம் ஏற்படாத போது நீ எந்த முறையைச் சேர்ந்திருந்தாலும் பயனற்றதே என்று ஷேகுல் இஸ்லாம் ஹுஸைன் அஹ்மத் மதனீ ﵀ அவர்கள் கூறியுள்ளார்கள். அனைத்து ஆன்மீக தொடர்களின் நோக்கமும் உள்ளத்தில் நிரந்தர திக்ர் ஏற்படுவதேயாகும். இதில் கொடுக்கப்படும் பயிற்சியினால் ஒருவருக்கு தொடர்படியான இறைச் சிந்தனை அவசியம் ஏற்படும்.

## அறிந்தவர்க்குக் கூடும், அறியாதவர்க்கு கூடாது..

இந்த நிய்யத்தைக் கற்றுக்கொள்வதற்கே மஷாயிகுகளிடம் வரவேண்டிய தேவையுள்ளது. ஏனெனில் நிய்யத் சரியானால் அமல்கள் அனைத்தும் சரியாகிவிடும். மௌலானா யஹ்யா ﵀ அவர்கள் சம்பந்தமாக ஒரு அற்புதமான சம்பவம் எழுதப்பட்டுள்ளது.

ஹஜ்ரத் யஹ்யா ﷺ அவர்கள் கோடைகாலத்தில் (வெயில் கடுமையாக இருக்கும்போது) அஸர், மஃரிப் தொழுகைகளுக்கு இடைப்பட்ட நேரத்தில் அருகிலிருக்கும் ஒரு கிணற்றிற்கு செல்லும் வழமை கொண்டிருந்தார்கள். அக்கிணற்றின் அருகில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பார்கள். ஹஜ்ரத்துடைய மாணவர்கள் அதிலிருந்து தண்ணீர் இறைத்து ஹஜ்ரத்தின் தலை மேல் ஊற்றுவார்கள்.

ஏறத்தாழ நூறு வாலி வரை ஊற்றுவார்கள். இதை அறிந்த ஹஜ்ரத்தின் அண்டை வீட்டார் ஒருவர், அவர் ஹஜ்ரத்துடைய உறவினராகவும், ஹஜ்ரத்திடம் சகஜமான தொடர்புள்ளவராகவும் இருந்தார். ஒரு முறை ஹஜ்ரத் அவர்களிடம் எங்களிடம் வீண் விரயம் செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டு நீங்கள் ஏன் இவ்வாறு விரயம் செய்கிறீர்கள்? நூறு வாலிகளுடைய தண்ணீரை வீணாக ஓட விடுகிறீரே? என்று கேட்டார்.

அதற்கு ஹஜ்ரத் அவர்கள் நண்பரே! எனக்கு இது கூடும். உனக்கு இது ஹராம் என்றார்கள். அவர் சற்று குழம்பியவராக அது எப்படி எனக்கு ஹராம், உங்களுக்கு மட்டும் ஹலாலாகும் என்றார். அதற்கு நான் ஆலிமாக உள்ளேன். நீ அறியாதவனாக உள்ளாய் என்றார்கள். அவர் கூடுதல் விளக்கம் தரவும் என்று கேட்டார்.

அதற்கு ஹஜ்ரத் மறுபடியும், சரி! நீ இக்கிணற்றின் பால் வரும் போது என்ன எண்ணத்தில் வருகிறாய்? என்று கேட்டார்கள். நான் குளிக்கும் எண்ணத்தில் வருகிறேன் என்று அவர் கூறியவுடன் இதனாலேயே ஐந்து அல்லது ஆறு வாலியை விட அதிகமாக பயன்படுத்தினால் அது விரயம் என்று கூறுகிறேன். மறுபடியும் அவர் நீங்கள் என்ன எண்ணத்தில் இங்கு வருகிறீர்கள்? என்று கேட்டபோது,

நான் நோயாளி என்பதால் வெயில் காலத்தில் குளிர்ச்சி பெற, சூட்டைத் தணிக்க இங்கு வருகிறேன்.

எனவே ஆயிரம் வாலிகள் ஊற்றினாலும் அது எனக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகும். நான் குளிக்க நாடவில்லை. மாறாக என்னுடைய நோக்கம் சூட்டை தணிப்பது தான் என்பதால் எது வரை சூடு தனியாதோ அதுவரை ஊற்றுவது எனக்கு ஏற்புடையதாகும். ஆக மேம்போக்காக பார்த்தால் இரண்டும் ஒரே செயல் தான். ஆனால் அதை ஒரு ஆலிம் சரியான எண்ணத்தில் செய்தால் அது அனுமதிக்கப் பட்டதாகவும், ஒரு விளக்கமில்லாதவர் அதே காரியத்தை செய்தால் தடுக்கப்பட்டதாகவும் ஆகிவிடுகின்றது.

ஆக நிய்யத்தை கற்பது மிக அவசியம் என்பதை இதன் மூலம் அறியலாம். மஷாயிகுகளின் தோழமையில் இவ்வாறான எண்ணங்கள் தான் கற்றுத் தரப்படுகின்றன. ஒருவரது பண்படாத மனம் இது போன்ற விஷயங்களை பெரும்பாலும் அறிந்திருக்காது. விழிப்புணர்வு கொண்ட பண்பட்ட உள்ளமே இதுபோன்ற நுணுக்கங்களை அறிந்திருக்கும். இன்னும் சில உதாரணங்களை கேளுங்கள்...

## லிஃப்டில் ஓதும் துஆ:

இக்காலத்தில் வானுயர்ந்த கட்டிடங்கள் அதிகம் பெருகிவிட்டன. அக்கட்டிடங்களில் பெரும்பாலும் லிஃப்ட் வசதிகள் கட்டாயம் இருக்கும். நம்மில் யாருக்காவது லிஃப்ட்டில் செல்லும்போது துஆ ஓத வேண்டும் என்ற எண்ணம் எப்போதாவது வந்துள்ளதா? உண்மையில் லிஃப்ட்கள் என்பவை அக்கால வாகனத்தை ஒத்தவைகளாகும். வாகனங்கள் பலவகையாக உள்ளன. அவற்றில் சில நீரிலும், சில சாலைகளிலும், சில காற்றிலும் பயணிக்கின்றன.

அவ்வகையில் இது பறக்கக்கூடிய அமைப்பிலுள்ள வாகனமாகும். எனவே வாகன துஆவான பிஸ்மில்லாஹி மஜ்ராஹா வ முர்ஸாஹா இன்ன ரப்பி ல கபூருர் ரஹீம் என்ற துஆவையே லிஃப்டில் செல்லும் போதும் ஓத வேண்டும். ஆனால் இந்த துஆ லிஃப்டுடைய பட்டனை அழுத்தியவுடன் சிந்தனைக்கு வர வேண்டும். நிய்யத் சார்ந்த மேற்கூறப்பட்ட பயிற்சி இல்லாத போது கண்டிப்பாக இது சிந்தனைக்கு வராது. இது போன்று ஒவ்வொரு எட்டிலும் தீனை பின்பற்றுதல் என்பது நிய்யத்தை கற்றுக்கொள்வதின் மூலமே சாத்தியப்படும்.

## மஷாயிகுகளும் மார்க்கல்வியில் தேர்ச்சிபெற்றவர்களே!

சூஃபிய்யாக்கள் ஷரீஅத்திற்கு முரண்பாடான பல செயல்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள் என்று மற்றொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் எந்த பரிபூரண சூபிய்யும் ஷரீஅத்திற்கு முரணாக செயல்பட மாட்டார், என்பது சத்தியமாகும். எப்போதாவது ஒரு சூஃபி தன்னிலை மறந்தவராக ஷரீஅத்திற்கு முரணாக கூறியிருந்தாலோ அல்லது செய்திருந்தாலோ அது அவருடைய தனிப்பட்ட அபிப்பிராயமாகும், மேலும் அது அவருடைய தனிப்பட்ட செயலாகும்.

ஆனால் நம்முடைய மஷாயிகுகள் அனைவரும் மார்க்கக்கல்வியிலும், ஷரீஅத் சட்டங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவே இருந்துள்ளனர். இதனால் தான் இத்துறையில் முதிர்ச்சியடைந்த முன்னோடியான மகான்கள் தங்களுடைய சீடர்களுக்கு தொடக்கமாக மார்க்கக்கல்வி கற்கும்படி வலியுறுத்தியுள்ளார்கள். அதுவே அடிப்படையானதும் ஆகும்.

ஜுனைதுல் பஃக்தாதீ ﵀ அவர்கள்

مَنْ لَّمْ يَقْرَءُ الْقُرْآنَ وَ لَمْ يَكْتُبِ الْحَدِيْثَ لَا يَقْتَدِى فِيْ هَذَا الْأَمْرِ

**குர்ஆன், ஹதீஸை படிக்காதவர் இத்துறையில் பின்பற்றப்பட தகுந்தவரல்ல என்று கூறியுள்ளார்கள்.**

நம்முடைய ஆன்மீகத் தொடரில் முன்னனி பெற்ற அறிஞர்கள்கூட முதலாவதாக மார்க்கக்கல்வி பயிலவே அதிகம் வலியுறுத்தியுள்ளார்கள். இமாம் முஜத்தித் அல்ஃபஸானி ﵀ அவர்கள் தங்களுடைய கடிதத்தொகுப்பில் மார்க்கக்கல்வி பயிலாமல் தயவு செய்து இத்துறையில் காலடி எடுத்து வைக்க வேண்டாம் என்று எழுதியுள்ளார்கள்.

இப்னுல் ஜவ்ஸி ﵀ போன்ற பேணுதல் மிக்க மகானும்

رُؤُوْسًا فِيْ الْقُرْآنِ وَ الْفِقْهِ وَمَا كَانَ الْمُتَقَدِّمُوْنَ فِيْ التَّصَوُّفِ إِلَّا

தஸவ்வுஃபில் முன்னோடிகளாக திகழ்ந்த மகான்கள் அனைவரும் குர்ஆன், ஃபிக்ஹ், ஹதீஸில் தேர்ச்சிபெற்றவர்களாக திகழ்ந்துள்ளனர் என்று கூறியுள்ளார்கள்.

## புரியாதவர் புறந்தல்லவே செய்வார்:-

பிறகு ஏன் மஷாயிகுகளின் மீது மிக பாரதூரமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன என்ற சந்தேகம் எழலாம். இதற்கு காரணம் சில நேரங்களில் சிலரின் வாசகங்களை புரிவதில் கேட்பவருக்கு தடுமாற்றமும். குழப்பமும் ஏற்படுவதினாலேயேயாகும். தனக்கு தெரியாத

கருத்துடன் முரண்படுவதும், விரைவில் ஏற்க மறுப்பதும் மனிதர்களுடைய இயற்கை சுபாவம் என்பது நாம் அறிந்ததே.

எனவே பிறருடைய கருத்துக்கள் நம் கவனத்திற்கு எட்டாதபோது உடனடியாக எதிர்ப்பில் இறங்கிவிடுவோம். மிக உயர்ந்த மகான்கள், அறிஞர்களுக்கெதிராகவும் கூட எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்துவிடுவோம்.

இதனாலேயே ஹுஜ்ஜத்தே இஸ்லாம் இமாம் கஜ்ஜாலி ﵀ போன்ற உயர் நிலை அடைந்த மகான்களுடனும் அக்கால அறிஞர்கள் எதிர்ப்பு காட்டியுள்ளனர்.

இமாம் கஜ்ஜாலி ﵀ அவர்களின் அனேக புத்தகங்களை தீயிலிட்டு பொசுக்கினர். பிறகு நடுநிலை சிந்தனைக்கொண்ட அறிஞர்கள் அப்புதகங்களில் எழுதப்பட்ட கருத்துக்களை நியாயமாக விளக்கமளித்தபோது தவறை உணர்ந்த அறிஞர்கள் இமாம் கஜ்ஜாலியின் அனைத்து புத்தகங்களையும் போற்றிப் பாதுகாத்தனர்.

எனவே இதுபோன்ற எதிர்ப்புகளனைத்தும் அப்புத்தகத்தில் கூறப்பட்ட விஷயங்கள் நம் சிந்தனைக்கு சரிவர புரியாததின் விளைவுகளினாலேயாகும்.

இவ்வாறே இமாம் காழி இயாழ் ﵀ அவர்களின் மீது யூதர் என்ற பழிசொல் கூறப்பட்டதும், அன்னாரின் பிரபல்யமான புத்தகமான ஷிஃபாவை அசிங்கப்படுத்தியதும் மேலே கூறப்பட்டதைப் போன்று சரிவர புரியாததின் விளைவுகளே. பிறகு உண்மை வெளிப்பட்டபோது அப்புத்தகம் ஷிஃபா ஷரீஃப் என்று உயர்வாக மதிக்கப்பட்டதை நாம் அறியாமல் இல்லை.

நபியின் வாழ்க்கை வரலாற்றை விளக்குவதில் இதற்கு நிகரான வேறு புத்தகம் கிடையாது எனுமளவு அங்கீகாரம் ஏற்பட்டுவிட்டது.

இவ்வாறே ஷேக் அஹ்மத் கபீர் ரிஃபாயி ﵀ அவர்களை ஒரு சந்தர்ப்பத்தில் அனைத்து மக்கள் முன்னால் காஃபிர், வழிகெட்டவர் என்பதாக தூற்றப்பட்டது, கேவலப்படுத்தப்பட்டது. பிறகு அவர்களை உயர்ந்த ஆன்மீக ஆசான், மகான் என்று புகழப்பட்ட ஒரு தருணமும் வந்தது. இதுபோன்ற நிகழ்வுகளின் அடிப்படை காரணம், கூறுபவர் எச்சொல்லை கூறுகின்றார் என்பதை விளங்கி அதற்கேற்றாற்போல் விளக்கமளிக்கப்படத் தவறியதனால் ஆகும்.

அவ்வாறே எப்பின்னணியில் அவ்விஷயத்தை கூறியுள்ளார் என்பதும் அவசியம் விளங்கப்பட வேண்டும்.

تَوْجِيْهُ الْقَوْلِ بِمَا لَا يَرْضَى بِهَا الْقَائِل

"கூறியவர் நாடாத கருத்தைக் கேட்பவர் தவறாக புரிந்து கொண்டு விளக்கமளிப்பது முறையற்றதாகும்" இதனாலேயே ஏதேதோ அர்த்தங்களும், அபத்தங்களும் புரிந்துக்கொள்ளப்படும் அவலநிலை உண்டாகிவிட்டது எனலாம்.

உதாரணமாக ஒருவர் நில், செல்லவேண்டாம் என்றார். இதைக்கேட்டவர் நிற்கவேண்டாம் செல் என்று மாற்றி அர்த்தம் கொண்டால் இது எவ்வாறு முறையாகும்?. இதே நிலைதான் தஸவ்வுஃபுடைய மகான்களுடனும் நடந்துள்ளது. அவர்கள் கூறிய நோக்கத்திற்கு அப்பாற்பட்டு கேட்பவர் தான் புரிந்த கருத்தைக் கூறி விமர்சனம் செய்வதுதான் இன்று வரை நடந்து வருகின்றது.

## விமர்சனங்களும், விளக்கங்களும்:

அல்லாஹ் தன் ஆற்றலால் மிகச்சிறந்த அறிஞர்களின் மூலம் இம்மகான்களின் கண்ணியத்தை பாதுகாத்துவிட்டான்.

இமாம் இப்னுல் ஜவ்ஸி ﷺ அவர்கள் صفوة الصفوة தொகுப்பையும், அல்லாமா ஷம்சுத்தீன் தஹபீ ﷺ அவர்கள் سير أعلام النبلاء ,அப்துர் ரஹ்மான் ஜாமி ﷺ அவர்கள் نفحات السلوك என்ற புத்தகத்தையும், இமாம் அப்துல் ஹக் முஹத்திஸ் திஹ்லவி ﷺ அவர்கள் اخبار الاخيار என்ற புத்தகத்தையும், இமாம் அப்துல் வஹ்ஹாபி ஷஃரானி ﷺ அவர்கள் இதற்காக தனித் தொகுப்பையும் எழுதியுள்ளார்கள். மேற்கூறப்பட்ட இந்த அனைத்து தொகுப்புகளிலும் விமர்சிக்கப்பட்ட ஆன்மீக அறிஞர்களின் இரகசிய விஷயங்களை மிக விளக்கமாக தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இதல்லாத இன்னும் எண்ணற்ற தஸவ்வுஃப் சம்பந்தப் பட்ட சந்தேகங்களுக்கு இமாம் முஜத்தித் அல்பஸானி ﷺ அவர்கள் தங்களுடைய கடிதத்தொகுப்பில் மிகத்தெளிவாக விளக்கமளித்துவிட்டார்கள். அவர்களின் கடிதத்தொகுப்பை படிப்பவர் அதில் ஷரீஅத் சுன்னத்திற்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் என்பதை நன்கு புரிந்துகொள்வார்.

தற்காலத்தில் ஹஜ்ரத் தானவீ ﷺ அவர்கள் இரண்டாயிரத்திற்கும் அதிகமான புத்தகங்களை எழுதி ஷரீஅத், தரீகத் ஆகிய இரண்டிற்குமான ஆழமான தொடர்பை விவரித்துள்ளார்கள். ஹஜ்ரத் தானவீ ﷺ அவர்கள் தங்களுடைய பிரபலமான தப்ஃஸீர் பயானுல் குர்ஆனில், ஆன்மீக பாட்டையில் பயணிப்பவரின் ஒழுக்கங்களை

குர்ஆனுடைய வசனங்களின் வாயிலாகவே மிக அழகாக புரியவைத்துள்ளார்கள். அதனை படிக்கும்போது அல்லாஹ் தன் நல்லடியார்களுக்கு எவ்வாறெல்லாம் தன் ஞானத்திலிருந்து அளப்பரிய பங்கை வழங்கியுள்ளான் என்ற வியப்பு ஏற்படும்.

நம்முடைய வழியும் (நக்ஷபந்தி) நடுநிலையான வழியாகும். நாம் மார்க்கக் கல்வியில் ஆழ மூழ்கி மஷாயிகுகளை குறைகாணுமளவோ அல்லது மஷாயிகுகளுடன் அதிகம் ஐக்கியமாகி மார்க்கக்கல்வி கற்பதை குறைகாணும் போக்கோ நம்மிடம் இருக்காது. எனவே இப்பாதை நடுநிலையான பாதையாகும்.

ஒரு கரத்தில் மார்க்கஞானத்தையும், மறு கரத்தில் இறைக்காதலையும் ஏந்தி வாழ்வில் முன்னேறுபவர்களாக நம்முடைய சில்சிலாவுடைய முன்னோர்கள் இருந்துள்ளனர்.

எனவேதான் நம்முடைய தேவ்பந்த் மகான்கள் ஹதீஸ் பாடம் நடத்த அமர்ந்தால் இக்கால அஸ்கலானி, கஸ்தலானி போன்று எண்ணுமளவு திறமை பெற்றவர்களாகவும், கான்காவில் அமர்ந்தால், ஜுனைத் பக்தாதி, பாயஜித் போன்ற மகான்களின் ஞாபகம் ஏற்படுமளவு ஆன்மீகப் பாதையில் தேர்ச்சிபெற்றும் விளங்கியுள்ளார்கள்.

ஆக இந்த இரு துறையிலும் அல்லாஹ் அவர்களுக்கு பரிபூரணத் திறமையை வழங்கியிருந்தான். இதனடிப் படையிலேயே நம்முடைய பாதையும் நடுநிலையானதாகும்.

## தஸவ்வுஃப் ஏன்? எதற்கு?

தஸவ்வுஃபின் நோக்கங்கள் மூன்றாகும்.

1. இறையச்சம் கொள்ளல்.

2. நபியின் நடைமுறையை பின்பற்றி செயல்படுதல்.

3. மனோ இச்சைக்கு மாறுபடல் ஆகிய இவைகள்தான் தஸவ்வுஃபின் சாராம்சங்களாகும்.

இம்மூன்றும் ஷரீஅத்தில் இல்லாதது என்று எவரும் கூற இயலாது. இம்மூன்றும் பெற்றவர் தஸவ்வுஃபின் நோக்கத்தை அடைந்தவராவார். நல்லோர்களின் சகவாசத்திலிருந்து இம்மூன்றைப் பெறுவதே நாடப்படுகின்றது.

ஹஜ்ரத் தானவீ ﵀ அவர்களிடம் ஒருவர் தஸவ்வுஃபின் நோக்கமென்ன என்று கேட்டார்? அதற்கு தானவீ ﵀ அவர்கள் மனிதனின் நரம்பு, ரோமம் ஒவ்வொன்றிலிருந்தும் பாவக்கிருமிகள் நீங்க வேண்டும் என்று கூறினார்கள்.

அக்கால சிறந்த கல்விமான்கள்(உலமாக்கள்) அனைவரும் மஷாயிகுகளிடம் பைஅத் செய்தவர்களாகவே இருந்தனர். இமாம் ஷாமி ﵀ அவர்களின் ஷேக் காலித் குர்தி ﵀ அவர்கள். முஹத்திஸ் அப்துல் ஹக் திஹ்லவி ﵀ அவர்களிடமும், காழி ஸனாவுல்லாஹ் (பானிபட்) அவர்கள், மிர்ஜா மழ்ஹர் ஜானேஜானா ﵀ அவர்களிடம், ஹஜ்ரத் நானுத்வீ, கங்கோஹி, ஷேகுல் ஹிந்த் ﵀ போன்றோர் ஹாஜி இம்தாதுல்லாஹ் மக்கீ ﵀ அவர்களிடமும், நமக்கு அறிமுகமான ஹஜ்ரத் முஃப்தி முஹம்மத் ஹஸன் ﵀ அவர்கள் (ஜாமிஆ அஷ்ரபிய்யாவின் ஸ்தாபகர்) ஹஜ்ரத் தானவீ ﵀ அவர்களிடமும் பைஅத் செய்திருந்தார்கள்.

ஹஜ்ரத் காரீ தைய்யுப் ﵀, முஃப்தி ஷஃபீ ﵀, பின்னூரி ﵀ ஜாலன்தரி ﵀ ஆகியோர்களும் தங்களுடைய ஆசான்களிடம் அக, புற ஞானங்களனைத்தையும் கற்றுக்கொண்டனர். இதுவே நம்முடைய நடுநிலையான பாதையாகும். இதன் மூலம் நமக்கு அமல் செய்வதும்

இலேசாகும். அதோடு அமலின்போதுள்ள மனோ நிலையும் சீராகும்.

## மூங்கிலும் கரும்பும் எவ்வாறு ஒன்றாகும்?

மூங்கில் பார்ப்பதற்கு கரும்பு போன்று தெரிந்தாலும் வெளிப்புறத்தில் காய்ந்து, சாறு ஏதும் இல்லாததாக இருக்கும். ஆனால் இதற்கு மாற்றமாக கரும்பு பசுமையாக, ருசியான சாறு கொண்டதாக இருக்கும். இரண்டும் மேம்போக்காகப் பார்ப்பதற்கு முழுக்க ஒத்ததாக தெரிந்தாலும் ஒன்று சாறற்றதாகவும், மற்றொன்று சாறு நிரம்பியதாகவும் இருக்கும்.

யார் தஸவ்வுஃப் கற்காமல் அமல் செய்கிறாரோ அவரின் அமல்கள் மூங்கில் போன்று காய்ந்து, ருசியற்றதாக இருக்கும். தஸவ்வுஃபைக் கற்று அமல் செய்பவரின் வணக்கம் ருசியுடன் சாறு நிரம்பியதாக இருக்கும்.

ஒரு கூலிக்காரரை நியமித்து ஒரு வீட்டை உடைக்கக் கூறினால், அவர் எந்த சலனமுமின்றி வீட்டை இடித்துவிட்டு ,அதற்குரிய கூலியை வாங்கிச் சென்றுவிடுவார். எதை உடைத்தோம், இது எவ்வளவு சிரமத்தின் பின் கட்டப்பட்டது என்ற எந்த உணர்வும் அவருக்குள் இருக்காது.

ஆனால் ஒரு நேசரிடம் நீ மலையை பிளந்து அதிலிருந்து ஊற்றை ஓடச்செய்தால் தான் உன்நேசர் உன்னை விரும்புவார் என்று கூறப்பட்டால் அவர் மலை என்று மலைத்து நில்லாமல் அதையும் உடைக்க ஆரம்பிப்பார். அவரது ஒவ்வொரு அடியிலும் தன் அன்பனை நெருங்கிக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு நிரம்பியிருக்கும்.

இது கடினமான காரியம் என்றாலும் சிந்திக்காமல் செயல்பட முற்படுவார். ஏனெனில் பார்க்கும் அவரின் கண்முன் நேசரின் நேசம் மட்டுமே தொக்கி நிற்கும். ஆக ஒரு நேசரின் மனோநிலை கூலிக்காரரிடம் இருக்காது என்பது உறுதியிலும் உறுதி. இன்று நாம் ஒருக் கூலிக்காரனைப்போன்றே தொழுகின்றோம். சூஃபிய்யாக்கள் நம்மை நேசரைப்போன்று தொழவைக்கவே பாடுபடுகின்றனர்.

எதுவரை நாம் நம்முடைய ரசனையற்ற ஸஜ்தாக்களை, உணர்வற்ற ரக்அத்களை தொழுதுக்கொண்டிருப்போம்? நீ உன் இறைவனைப் பார்ப்பதைப் போன்று தொழுவாயாக. அவ்வாறில்லையானால் உன் இறைவன் உன்னைக் காண்பது போன்று தொழுவாயாக என்று ஹதீஸில் கூறப்பட்ட தொழுகை நிலை ஏற்படவேண்டாமா?

நாமும் நம்முடைய ரசனையற்ற ஸஜ்தாக்களை, உணர்வற்ற ரக்அத்துகளை மாற்ற வேண்டாமா? நம்முடைய இறந்த உள்ளமும் உயிர்பெற்று இறைதியானத்தில் திளைக்க வேண்டாமா?

*அழுவதோ, அழவைப்பதோ நமது நோக்கமில்லை.*

*பறப்பதோ, பறக்க வைப்பதோ நமது வேலையுமில்லை.*

*நம்முடைய கோபமுள்ள எஜமானனை சமாதானப்படுத்துவதே நமது வேலையாகும்.*

என்று நம்முடைய முன்னோர்கள் அடிக்கடி கூறுவார்கள். எவ்வாறாவது எனக்கு இறைவனின் திருப்பொருத்தம் கிடைக்க வேண்டுமென்பதே தஸவ்வுஃபின் நோக்கமாகும்.

அல்லாஹ் ஓர் அடியானை பொருந்திக்கொள்ள அவனின் உள்ளத்தில் இறையச்சமும், அவனது செயலில் சுன்னத்தான

நடைமுறையும், மனோ இச்சைக்கு மாறுபடும் நிலையும் இருத்தல் அவசியமாகும். நான் திருந்த வேண்டும் என்ற கவலை இருந்தாலே சீர்திருத்தம் கிடைத்துவிடும். அல்லாஹ் நம்மனைவர்களையும் சீர்திருத்தம் பெற்றவர்களாக வாழ்வதற்கு வாய்ப்பளிப்பானாக!ஆமீன்...